MULU'S POPULAR PENNY SERIES—57 [ஆசிரியர்: நாரண துரைக்கண்ணன்

## ரஷ்யா சர்வாதிகாரி

# ஜோஸப் ஸ்டாலின்



All Rights Strictly Reserved] [பிரசுரம்: எம். எஸ். ராமுலு கம்பெனி

## நேரு ஹிந்தி முதல் பாடம், இரண்டாம் பாடம்

தமிழ் மூலமாய் ஹிந்தி உயிர் எழுத்துக்கள், மெய் எழுத்துக்கள், கூட்டு எழுத்துக்கள், சிறு வார்த்தைகள், எண்கள் முதலியவை சுலபமாய்க் கற்றுக் கொள்ளலாம். 64-பக்கங்கள் கொண்டது; விலை அணா 2. ஒரு காபி அனுப்ப மூன்று அணா இந்தியா தபால் ஸ்டாம்பு அனுப்பிவைக்கக் கோருகின்றோம். [நேரு ஹிந்தி ஆசான் வாங்குபவர்கள் ஷை புத்தகத்தை வாங்க வேண்டியதில்லை.]

**Nehru Hindi—Telugu 1 & 2 Reader. Price Two Annas**

# நேரு ஹிந்தி ஆசான்

அல்லது

## ஹிந்துஸ்தானி ஸ்வபோதினி

[துரைத்தனத்தார் அங்கீகரித்தது]

தமிழ் படிக்கத் தெரிந்த ஒவ்வொருவரும் சிறுவர் முதல் பெரியோர் ஈருக தங்கள் ஓய்வுக் காலங்களில் தினந்தோறும் அரைமணி நேரம் இப்புத்தகத்தை அப்யசித்து வந்தார்களாஞல், உபாத்தியாயர் உதவியின்றித் தமிழைக் கொண்டு நாலே வாரத்தில் நல்ல ஹிந்தி பாஷையைச் சப்ததோஷ மில்லாமல் சுலபமாய்ப் பேசவும், படிக்கவும், எழுதவும் கற்றுக்கொள்ளக் கூடிய அரிய பெரிய புத்தகம். இப்புத்தகம் ஒன்று கையிலிருந்து விட்டால், பாஷைக் கஷ்டம் என்பது சிறிதுமின்றி உலகத்தையே சுற்றிவந்து விடலாம். ஹிந்திப் படங்களையே பெரிதும் விரும்பும் சினிமா நேயர்களுக்கு இது மிகவும் இன்றியமையாத புத்தகமாகும். வியாபாரிகளுக்கு இப்புத்தகம் ஒரு தோன்ருத் துணைவனுகும். இப்புத்தகம் 22-பெரிய அத்தியாயங்களாய் வகுக்கப்பட்டிருக்கின்றன. தமிழர் யாவரும் இப் புத்தகத்தை வாங்கி வாசித்து பெருமையும் பயனும் அடைய வேண்டி இதற்கு மிகக் குறைவாக விலை வைத்திருக்கின்ருேம்.

### விலை அணா 0—12—0

அணா 0—14—0-க்கு மணியார்டர் அல்லது இந்தியா தபால் ஸ்டாம்பு அனுப்பினல் ஒரு காபி அனுப்பி வைக்கப்படும். வி. பி. யில் அனுப்புவதானல் தபாற் செலவு 0—7—0 அணா அதிகமாகும்.

## எம். எஸ். ராமுலு கம்பெனி

286, அப்பா பில்டிங்ஸ் : : எஸ்பினேட், மதராஸ்

கமலா வாசக நிலையம்
து. ரெங்கநாதபுரம்
வரிசை நெ. 626 1034
பகுதி நெ.

ரஷயா சர்வாதிகாரி

# ஜோஸப் ஸ்டாலின்

## 1. தவமிருந்து பெற்றது தாந்தோன்றியானது

உலக மகா புருடர்களின் ஜீவிய சரித்திரங்களைப் படிக்குங்கால், 'அத்திப்பூ பூத்தாற்போல' ஒருவர் இருவரைத் தவிர, பெரும்பாலோர் இளமையில் வறுமைப் பிணியால் பீடிக்கப்பட்டு சொல்லொணுத் துயர்களுக் குள்ளானவர்களே என்பது தெள்ளிதில்விளங்கும். ஷேக்ஸ்பியர், ஜான்ஸன், ஜார்ஜ் ஸ்டீவன்ஸன், பெஞ்ஜமின் பிராங்க்லின், ஆப்ரஹாம் லிங்கன், ஹென்றி போர்டு போன்ற உலகம் போற்றும் உத்தமர்கள் தத்தம் இளம்பிராயத்தில் ஏழையினும் பரம ஏழைகளாக விருந்து, பலவித இன்னல்களை யனுபவித்தனர். இவர்களைப்போலவே, ரஷியாவின் சர்வாதிகாரியான ஜோஸப் ஸ்டாலினும் வறுமையிலேயே பிறந்து, வறுமையிலேயே வளர்ந்து வாழ்க்கையில் முன்னேற்ற மடைந்தவர்.

ஸ்டாலினின் மூதாதையர் காகஸஸ் மலைப்பிரதேசத்தைச் சேர்ந்த ஜியார்ஜியா என்னும் மாகாணத்திலுள்ள டிடி-லிலோ என்னும் குக்கிராமத்தில் வாழ்ந்து வந்தனர். அவர்கள் சக்கிலியத் தொழிலைச் செய்து கண்ணியமாக வாழ்க்கை நடத்தி வந்தனர். காலச் சக்கரம் சுழலவும் அவர்க

ளுடைய கண்ணியமான வாழ்விற்கும் பங்கம் ஏற்படலா யிற்று. அவர்கள் செய்துவந்த தொழில் போதிய வருவாயை யளிக்கவில்லை. ஆகவே, ஸ்டாலினின் தகப்பனுரான விஸ்ஸாரி யன் ஜுகாஷ்விலி தம் பூர்வீக வாசஸ்தலத்தைவிட்டு, அதற் கருகாமையிலிருந்த கோரி என்னும் பட்டணத்துக்குச் சென்று, தம் தொழிலை நடத்தலானுர்.

விஸ்ஸாரியன், கோரிக்கு வந்து சில மாதங்களில் எகடேரினு என்னும் பெயருடைய பதினுன்கு வயதுள்ள ஜியார்ஜிய மடந்தையை மணந்துகொண்டார். மணம் முடிந்த சில வருடங்களுக்குள்ளாகவே அத்தம்பதிகளுக்கு மூன்று குழந்தைகள் பிறந்தனவாயினும், அவை அற்பாயுசாகவே மாண்டன. இதன் பயனுக, பெற்றேர் அடைந்த துயரம் அளவிடற்கரியது.

நம் வாழ்க்கையில் சுகமும் துக்கமும், இன்பமும் துன்பமும், வாழ்வும் தாழ்வும் மாறிமாறி வருவதை நாம் கண்கூடாகக் காண்கிறேமல்லவா? எகடெரினுவின் துய ரத்தி னிடையே ஒரு இன்பமும் வரக் காத்திருந்தது. அடுத்து அவள் சூல்கொண்டு கிறிஸ்துமஸ் பண்டிகை சமயத் தில் மகவைப் பெற எதிர்பார்த்திருந்தாள். தனக்குப் பிறக்கப்போகும் மகவு தீர்க்காயுள் படைத்ததாகவும், ஆண் குழந்தையாகவும் இருக்கவேண்டுமென்று இறைவனை நோக்கி இறைஞ்சினுள். தான் எதிர்பார்க்கிறபடி கடவுள் அருள் பாலிப்பாராஞல், அம் மகவுக்கு ஜோஸப் என்று நாமமிட்டு, தேவாலயப் பணிக்கு அர்ப்பணம் செய்வதாகவும் நேர்ந்து கொண்டாள்.

எகடெரினுவின் பிரார்த்தனை வீண்போகவில்லை. 1879-ம் வருடம் டிஸம்பர் மாதம் 21-ம் தேதியன்று, அப் பெண்மணி ஒரு ஆண் மகவை ஈன்றெடுத்தாள். தான் பெற்ற குழந்தை ஆண் என்று அறிந்ததுமே அவள் அடைந்த ஆனந்தத்துக்கு அளவேயில்லை.

இந்தப்பிள்ளைதான் பிற்காலத்தில் ரஷியாவின் சர்வாதி காரியாக வந்த ஜோஸப் ஸ்டாலின் ஆவார். இவர் குழந் தைப் பருவத்தில் ஸோஸோ என்ற செல்வப் பெயரால்

அழைக்கப்பட்டார். இவருக்கு ஏழு, எட்டு வயதானவுடன், இவரது தந்தையான விஸ்ஸாரியன், இவரைத் தம் பரம்பரைத் தொழிலில் ஈடுபடுத்த எண்ணங்கொண்டார். ஆனால் எகடெரினு இதைச் சிறிதும் விரும்பாமல் ஸோஸோவைப் பள்ளிக்கூடத்தில் சேர்த்தாள். பள்ளியில் ஸோஸோ தன் புத்தி தீக்ஷண்யத்தினுல் முதன்மையாக விருந்ததுமன்றி, ஆசிரியர்களின் நன்மதிப்பையும் ஆதரவையும் பெற்றுர்.

ஸ்டாலினுக்கு வயது பதினென்று. துரதிர்ஷ்ட வசமாக, திடீரென்று விஸ்ஸாரியன் இறந்து போனுர். ஏற்கனவே ஏழ்மை நிலைமையி லிருந்த எகடெரினு இந்த எதிர்பாராத சம்பவத்தால் அடைந்த துயரமும் கஷ்டமும் சொல்லற் பாலதன்று. ஆயினும், அவள் சாதாரணமாகப் பெண்களிடம் காணப்படாத அதீதமான தன்னம்பிக்கையும், திடகாத்திரமும், ஆற்றலும் படைத்தவளாதலால்,உடனே தையல் தைக்கும் வேலையில் அமர்ந்து, இராப்பகலாக உழைத்து, ஸ்டாலின் கல்வியைத் தொடர்ந்து கற்க வசதி செய்து தந்தாள். தன் அருமை மகனின் எதிர்கால நன்மைக்காக அவள் தன் வாழ்க்கையையே தியாகஞ் செய்யத் தயாராயிருந்தாள் என்ருல் மிகையாகாது.

ஸ்டாலினும் தம் தாயாருடைய உழைப்பும் நம்பிக்கையும் வீண் போகாதபடி ஒழுங்காகவும், ஊக்கமாகவும் படித்து பள்ளிக்கூடத்தில் பிரகாசித்தார். ஒரு விநாடிகூட வீண் பொழுது போக்காமல் தம் பாட புத்தகங்களை ஊன்றிப் படித்து, கற்ருேர்களிடம் நெருங்கிப் பழகி, முடிவில் முதன்மையாகத் தேர்ச்சி பெற்ருர். இதற்காக, அவருக்கு உபகாரச் சம்பளம் அளிக்கப்பட்டது. பிறகு, எகடெரினு விரும்பியபடி, அவர் ஜியார்ஜியாவின் தலைநகரான டைப்ளிஸ் என்னும் பட்டணத்திலுள்ள சமயக் கல்வியைக் கற்பிக்கும் கலாசாலையில் சேர்ந்தார்.

ஸ்டாலின் கலாசாலையில் சேர்ந்த சமயம் ரஷ்யா முழுவதும் அரசியல் கிளர்ச்சி மிகுந்திருந்தது. ஜாரின் கொடுங்கோல் ஆட்சியில் மக்கள் வெறுப்புற்று, எங்கும் குழப்பம் விளைத்து வந்தனர். அரசாங்கத்தின் யதேச்சாதி

காரச் செய்கைகளைக் கண்டித்து, எதிர்த்துப் போராடுவதற்காக ஸ்தாபிக்கப்பட் டிருந்த சமதர்ம ஜனநாயகக் கட்சி (Social Democratic Party) அதன் கிளை ஸ்தாபனங்களை ரஷ்யாவின் முக்கியமான நகரங்களிலும், தொலைப் பட்டணங்களிலும் ஏற்படுத்தி யிருந்தது. டைப்ளிஸிலும் அத்தகைய கிளை ஸ்தாபனம் ஒன்றிருந்தது. அதன் ஆதரவில் அந்தரங்கக் கூட்டங்கள் பல கூட்டப்பட்டு, சம தர்மக் கொள்கைகளையும். அக் கொள்கைக்குப் பிதாவான கார்ல் மார்க்ஸின் கட்டுரைகளையும், நோக்கங்களையும் ஜனங்களிடையே பிரசாரம் செய்வதற் குரிய முயற்சிகள் செய்யப் பட்டன. பாமர மக்களை அரசாங்கத்துக்கு விரோதமாகக் கிளம்பும்படி செய்து, ஒரு புரட்சியை யுண்டாக்கி, ஜாரின் ஆட்சியை முடிப்பதே இந்த ஸ்தாபனத்தின் முக்கிய நோக்கமாக இருந்தது.

சமயாசார போதன கலாசாலையிலுங் கூட அதிகாரிகள் அறியாவண்ணம் கூட்டங்கள் கூட்டப்பட்டு, சம தர்மக் கொள்கைகள் விவாதிக்கப்பட்டு வந்தன. ஆகவே, அக் கலாசாலையில் பயின்றுவந்த ஸ்டாலினும் அந்தக் கூட்டங்களில் கலந்து கொண்டதில் ஆச்சரியமில்லை. அவர் அத்தகைய கூட்டங்களுக்குச் சென்றது மல்லாமல், சமதர்மக் கொள்கைகளையும், கார்ல் மார்க்ஸ் எழுதிய புஸ்தகங்களையும் ஏராளமாக வாங்கிப் படித்து, தீவிர சமதர்ம வாதியாக மாறி, அக் கலாசாலையி லிருந்த சமதர்ம வாதிகளின் தலைவராகவும் ஆனார். இதன் பின்பு சமதர்ம ஜனநாயகக் கட்சியுடனும் சம்பந்தம் வைத்துக் கொண்டார். கலாசாலை மாணவர்களுங் கூட அரசாங்கத்துக்கு விரோதமான கிளர்ச்சிகளில் ஈடுபட்டு வருவதை அதிகாரிகள் கூர்ந்து கவனிக்க லாயினர். ஆகவே, ஒரு நாள் மாணவர் தலைவரான ஸ்டாலினின் அறையை அதிகாரிகள் சந்தேகங் காரணமாக சோதனை போட்டனர். அதில் கார்ல் மார்க்ஸின் புஸ்தகம் ஒன்று அங்கு அகப்பட்டது. இதன் காரணமாக ஸ்டாலின் கலாசாலையினின்றும் நீக்கப்பட்டார். இச் செய்தி எகடெரினவுக்கு

எட்டியது. அவள் மனம் எப்பாடு பட்டிருக்கும் என்பதை நாம் விவரிக்க வேண்டியதில்லை.

இப்பொழுது ஸ்டாலின் திக்கற்றவராய், இப்பரந்த உலகில் தன்னந் தனியராய் விடப்பட்டார். ஆயினும் என் செய்வது? வாழ்க்கைச் சமுத்திரத்தின் அலைகளையும் கொந்தளிப்பையும் சுழல்களையும், அனுபவித்துத்தானே யாக வேண்டும். மலைத்து நிற்பதால் யாது பிரயோசனம்? ஸ்டாலின், மனம் தளர்வுறாமல், சில சிறுவர்களுக்குக் கல்வி கற்பிக்கும் வேலையில் முதலில் அமர்ந்தார். இதில் போதிய ஊதியம் கிடைக்காமையால், கடைகளில் கணக்கெழுதுதல், பயிண்டு வேலைசெய்தல் முதலியவற்றைச் செய்து, அவற்றின் வாயிலாகக் கிடைத்த சொற்ப வருவாயைக்கொண்டு, காலங் கடத்தினர். இக் காலங்களில் வயிற்றுப் பிழைப்புக்கு வேலை செய்வதோடு மட்டும் நின்றுவிடாமல், இராக் காலங்களில் அதிகாரிகளுக்குத் தெரியாதபடி, சமதர்மக் கொள்கைகளைப் பரப்புவதில் தீவிரமாக ஈடுபட்டு வந்தார். 1898-ல் அவர் டைப்ளிஸ் சமதர்ம ஜனநாயகக் கட்சியின் முக்கியமான அங்கத்தினருள் ஒருவரானர்.

## 2. போல்ஷிவிஸ்டு ஆதல்—லெனின் சந்திப்பு

1898-ஆம் வருடம் சோவியத் சர்க்காரின் சரித்திரத்தில் பிரசித்திபெற்றது. இதுவே சோவியத் சகாப்தத்தின் முதல் வருடமாகும். இதே வருடம் மார்ச்சு மாதந்தான் ஒன்பது சமதர்மக் கட்சிப் பிரதிநிதிகள் மின்ஸ்க் நகரில் கூடி, பிரசித்திபெற்ற மின்ஸ்க் மகாநாட்டை நடத்திப் பல தீர்மானங்களை நிறைவேற்றினர். அவற்றுள், 'ஜாரின் ஆட்சியை ஒழித்து, ரஷ்யா முழுவதும் சமதர்மக் கொள்கைகளைப் பரப்புவது'தான் முக்கியமானதாகும். இம் மகாநாடுதான் ரஷ்ய சரித்திரத்தில், போல்ஷிவிக் இயக்கத்தின் பிரதான கட்சியான சமதர்ம ஜனநாயகத் தொழிலாளர் கட்சியின் முதல் காங்கிரஸாகக் கூறப்படுகிறது.

மின்ஸ்க் மகாநாட்டின் தீர்மானங்களைத் தொழிலாளர்கள் அறிந்தவுடன், ஐக்கியப்பட்டு, தம்மைப் பலப்

படுத்திக் கொள்ளலாயினர். டைப்ளிஸில் இருந்த தொழி லாளர்களுக்கு, கலாசாலையி னின்றும் நீக்கப்பட்ட மாணவர் களே தலைவர்களாயினர். ஆடம்பரம், வெளிப்பகட்டு, படா டோபம், சுயவிளம்பரம் இவற்றை விரும்பாத ஸ்டாலின், மின்ஸ்க் மகாநாட்டின் தீர்மானங்களை ரெயில்வே தொழிலா ளர், புகையிலை, தோல் கிடங்குகளில் வேலைசெய்பவர்கள் ஆகியவர்களிடையே பரப்பிவருவதையே முக்கிய வேலையாகக் கொண்டார்.

1900-ம் வருடம், ரஷ்யப் புரட்சியின் மூலபுருஷரான லெனின் என்பவரின் தோழன் ஒருவன் டைப்ளிஸுக்கு வந்து சேர்ந்தான். அவன் பெயர் குர்னடோவஸ்கி. அவன் லெனினுடன் சில வருஷகாலம் தீவாந்தர சிட்சையை அனு பவித்தவன். லெனினின் கொள்கைகளையும் நோக்கங்களையும் நன்றாக அறிந்தவன். அவன் டைப்ளிஸுக்கு வந்த சில நாட்களுக் குள்ளாகவே, இரகசியமாக, சமதர்மக் கொள்கை களையும் லெனினின் நோக்கங்களையும் பொது மக்களிடை யே பிரசாரம்செய்து, அவர்களுடைய அனுதாபத்தைப் பெற முயற்சித்தான். நமது ஸ்டாலின் லெனினின் சீடராக ஆன தற்கு இவன் பிரசாரமே முக்கிய காரணமாகும்.

1900—1901-ல் டைப்ளிஸில் ஒன்றன்பின் ஒன் றாக பல வேலைநிறுத்தங்கள் நிகழ்ந்தன. இவை யனைத்திற் கும் மூலகாரணம் ஸ்டாலினே. அவர், தொழிலாளரையும் தீவிரவாதிகளையும் ஒன்றுசேர்த்து ஜியார்ஜியா மாகாணத்தின் வைஸிராயினுடைய மாளிகையின் முன்பு ஒரு பெரும் எதிர்ப்புக் கூட்டத்தை நடத்தினர். இச்சம்பவம் காரணமாக போலீஸார் புரட்சிக்காரர்களில் பலரைக் கைது செய்து, டைப்ளிஸ் கமிட்டியை நிலைகுலையச் செய்தனர். ஸ்டாலின் வீடும் சோதனையிடப்பட்டது. அவருங்கூடக் கைது செய் யப்படுவார் என்ற வதந்திகள் பிறந்தன. எனவே, 1901-ம் வருடக் கடைசியில் ஸ்டாலின் மாறுபெயருடன் பாடூம் என்னும் நகருக்குச் சென்றார். அங்கு சமதர்மவாதி ஒருவ ருடைய உதவியால், அவர் தம் கட்சியின் கிளை ஸ்தாபன மொன்றை ஏற்படுத்தினர். ராத்ஷீல்டு, மாண்டஷெவ்

தொழிற்சாலைகளில் வேலைசெய்துவந்த தொழிலாளர்களை வேலை நிறுத்தம் செய்யுமாறு தூண்டினார். 1902-பிப்ரவரியில் அங்குள்ள தொழிலாளர் யாவரையும் ஒன்றுகூட்டி ஒரு பொதுக்கூட்டம் நடத்தினர். வழக்கப்படி போலீசார் அநேகர் வீடுகளைச் சோதனைசெய்து, பலரைச் சிறைப்படுத்தினர். ஸ்டாலினும், தொழிலாளரை வேலைநிறுத்தம் செய்யத் தூண்டிய குற்றத்திற்காக, கைதியாக்கப்பட்டார். ஆயினும், விசாரணையில் பிராசிகியூஷன் தரப்பில் சாட்சிகள் சரியாக வாக்குமூலம் கொடாததால், அவர் விடுதலை செய்யப்பட்டார். டைப்ளிஸுக்குத் திரும்பியதும் முன்போலவே தம் "தொழிலில்" ஈடுபட்டார். அப்பொழுது அங்கு குமுறிக் கொண்டிருந்த ரயில்வே தொழிலாளரின் குழப்பத்தைப் பயன்படுத்திக்கொண்டு, வேலை நிறுத்தம் செய்யும்படி தூண்டினார். இதில் தாம் அதிகாரிகளால் சந்தேகிக்கப்படுவதை உணர்ந்ததும், ஸ்டாலின் மறுபடி பாடுமுக்குச் சென்றார். ஆனாலும் அவர் போலீஸாரின் பிடியில் சிக்கிவிட்டார். டைப்ளிஸ் கமிட்டியின் சட்டவிரோதமான நடவடிக்கைகளில் கலந்துகொண்டதாக அவர் மறுபடியும் குற்றஞ் சாட்டப்பட்டு, இரண்டு வருடம் சிறைவாசம் விதிக்கப்பட்டார்.

ஸ்டாலின் சிறைச்சாலையில் சும்மா இருக்க வில்லை. கார்ல் மார்க்ஸ் எழுதிய புஸ்தகங்களைப் படிப்பதிலும், லெனின் வெளி நாட்டிலிருந்து பிரசுரித்து வந்த 'இஸ்க்ரா' என்னும் பத்திரிகையை அதிகாரிகளுக்குத் தெரியாமல் வருவித்து வாசிப்பதிலும் அவர் தம் சிறைவாசத்தைக் கழித்தார். இச் சமயத்தில் சுமார் நாற்பது ரஷ்ய தீவிர வாதிகள் லண்டனில் கூடி சமதர்ம ஜனநாயகக் கட்சியின் இரண்டாவது காங்கிரஸை நடத்தினர். இவர்களில் சிலர், நேர்மையான முறைகளில், ஐரோப்பிய வல்லரசுகளுக்குத் திருப்தியளிக்கும் விதமாய் ரஷ்யாவில் சமதர்மக் கொள்கைகள் ஸ்தாபிக்க வேண்டுமென்று விருப்பங் கொண்டார்கள். மற்றும் சிலரோ இளைஞர்கள். பழைய முறைகளையே வேரறுத்துப் புரட்சி செய்ய வேண்டுமென்ற முற்போக்குக் கொள்கைகளை யுடையவர்கள். இரண்டாவது காங்கிரஸில், மேலே கூறிய அபிப்

பிராய பேதத்தின் காரணமாக சமதர்ம ஜனநாயகக் கட்சி போல்ஷிவிக் கட்சி, மென்ஷிவிக் கட்சி என்று இரண்டு கட்சிகளாகப் பிளவுபட்டுப் போயிற்று. இச் செய்தி சிறையிலிருந்த ஸ்டாலினுக்கு எட்டவும், போல்ஷிவிக் கட்சியை ஆதரிப்பதென்று முடிவு செய்து கொண்டார்.

1903-ம் வருடக் கடைசியில் ஸ்டாலின் விடுவிக்கப் பட்டார்; ஆனல், உடனே இர்குட்ஸ்க் மாகாணத்திலுள்ள கிராமம் ஒன்றில் பாதுகாப்பில் வைக்கப் பட்டார். அவர் அந்தக் கிராமத்தை அடையும் முன்பே தந்திரமாக அதிகாரிகளை ஏமாற்றி விட்டு, ஜனவரி 1904-ல் தப்பி யோடிவிட்டார். இப்பொழுதுதான் அவருக்கு முதன் முதலாக லெனினுடன் சம்பந்தம் ஏற்பட்டது. லெனின் அயல் நாட்டிலிருந்து எழுதிய முதற் கடிதத்தை அவர் பெற்ருர்.

ஸைபீரியாவிலிருந்து, போலீஸாருக்குப் போக்குக் காட்டிவிட்டுத் தப்பியோடிய ஸ்டாலின், ரஷியாவின் பிரதான எண்ணெய்ப் பிரதேசமாகிய பாகுவிற்குச் சென்ருர். அங்கு ஏற்கனவே சமதர்மக் கொள்கைகள் பரவி யிருந்தபடியால் ஸ்டாலின் சேவை செய்வதற்கு எளிதாயிற்று. அங்கிருந்த முஸ்லிம் தொழிலாளரின் பிரதான ஸ்தாபனமாகிய 'ஹம்லெட்'டின் ஆதரவில் அடிக்கடி பிரசங்கங்கள் செய்தார். இடைவிடாது வேலை செய்து, அநேகரைத் தம் "தொழிலில்" பழக்கினர்.

ஒருபுறம் கட்சியில் ஏற்பட்ட பிளவு அதிகரித்ததாயினும், மற்ருெருபுறம், அக் கட்சியின் அங்கத்தினர்களின் எண்ணிக்கை பன்மடங்கு பெருகலாயிற்று. 1904-ம் வருஷம் டிஸம்பர் மாதத்தில் நாடெங்கும் வேலை நிறுத்தங்கள் செய்யப் பட்டன. அராஜகமும், சில விடங்களில் உள் நாட்டுக் கலகங்களும் ஏற்படலாயின. உள்நாட்டில் இவ்விதம் அல்லோலகல்லோலப் பட்டுக்கொண் டிருக்கையில், ரஷியாவுக்கும் ஜப்பானுக்கும் போர் மூண்டது. ஜார், நாலாபுறமும் துன்புறுத்தப்பட்டு இன்னது செய்வதென்று தோன்ருமல் திணறிப் போனர். 1905-ஜனவரியில், ஜாரின் உறவினரான "ஸெர்கை

யின் கிராண்ட் டியூக் மாஸ்கோவில் ஒரு வெறியனால் கொல்லப்பட்டார். நிலைமையை ஒருவாறு சமாளிப்பதற்காக, ஜார் அதே வருடம் அக்டோபர் மாதத்தில் ஒரு புதிய அரசியல் முறையை வழங்கினார். இதனால் குழப்பம் சற்று அடங்கியது.

1904-1905-ல் நடந்த சம்பவங்களில் போல்ஷிவிக்குகள் கலந்துகொள்ளவே யில்லை. இதற்கு முக்கிய காரணம் அவர்களுக்கும் மென்ஷிவிக்குகளுக்கும் இடையே இருந்த விரோதமேயாகும். மேலும், அவர்கள் ஜாரின் கீழ் புதிய அரசியலை நடத்த விரும்பவில்லை. இச் சம்பவங்கள் நடந்து கொண்டிருக்கையில் ஸ்டாலின் சந்தடியின்றி, போல்ஷிவிக் இயக்கத்துக்கு ஆதரவு தேடுவதில் முனைந்திருந்தார். டைப்ளிஸிலிருந்த போல்ஷிவிக்குகளின் தலைவராகி, மென்ஷிவிக்குகளைச் சமயம் நேர்ந்தபோ தெல்லாம் தீவிரமாக எதிர்த்துத் தாக்கலானார்.

1905 டிஸம்பரில், போல்ஷிவிக் தேசிய மகாநாடு ஒன்று பின்லாந்தில், 'டாமர் போர்ஸ்' என்னுமூரில் கூடியது. லெனின் அங்கு ஒளிந்துகொண் டிருந்தாராதலால், அவரே அம் மகாநாட்டுக்குத் தலைமை வகித்தார். ஸ்டாலின் டிரான்ஸ்-காகேஷியாவின் பிரதிநிதியாக அம் மகாநாட்டுக்குச் சென்றிருந்தார். இங்குதான் முதன் முறையாக ஸ்டாலின் தம் குருவை நேரில் சந்தித்தார்.

1905-ல் நடந்த புரட்சி, போல்ஷிவிக்குகள் விரும்பியபடி, ஜாரின் ஆட்சியை வீழ்த்த வில்லை. டூமா என்னும் பொதுஜன அரசாங்க சபை, வாக்கு சுதந்திரம், வர்த்தக யூனியங்களுக்கு அனுமதி முதலியவை மட்டும் புரட்சி காரணமாக வழங்கப்பட் டிருந்தன. சமதர்ம ஜனநாயகக் கட்சிக்குப் புதிய மத்தியக் கமிட்டியைத் தேர்ந்தெடுப்பதற்காக போல்ஷிவிக்குகளும், மென்ஷிவிக்குகளும் 1906, ஏப்ரலில் ஸ்டாக் ஹோமில் கூடினார்கள். வழக்கம்போல் ஸ்டாலினும் இக் கூட்டத்துக்குச் சென்றார். இக் கூட்டத்தில், சமதர்ம ஜனநாயகக் கட்சி டூமாவுக்கு நடக்கும் தேர்தல்களில் கலந்து கொள்வதா, இல்லையா என்பதைப் பற்றி பிரச்சினை

யெழுந்தது. போல்ஷிவிக்குகள் டூமாவைப் பகிஷ்காரம் செய்ய வேண்டுமென்றனர். ஆனால் அவர்கள் பெரும் பான்மை யோராக இல்லாதபடியால், அவர்களுடைய தீர்மானம் தோல்வி யடைந்தது. ஸ்டாலின் இத் தோல்வியினால் மனத் தளர்ச்சி யடையவில்லை; சீக்கிரத்தில் தம் கோஷ்டிக்கு வெற்றி யேற்படுமென்ற எண்ணங் கொண்டார்.

மறு வருடம் லண்டனில் மற்றொரு கட்சி மகாநாடு நடைபெற்றது. முன்னூறு பிரதிநிதிகளுக்கு மேல் இம் மகாநாட்டிற்கு வந்திருந்தனர். ஸ்டாலின் இவனோவிட்ச் என்னும் மாறு பெயருடன் இக் கூட்டத்துக்குச் சென்றார். இங்கு ஸ்டாலினைப் பற்றி ஒரு முக்கியமான விஷயத்தைக் கூறுவது அவசியமாகிறது. அவர் அரசாங்கத்துக்கு விரோத மானதும், சட்ட விரோதமானதுமான வேலைகளில் தீவிர மாக ஈடுபட்டிருந்தா ராதலால் அதிகாரிகள் அவரைக் கண் காணித்து வரலாயினர். அவர்களிடமிருந்து தப்பிச் செல் வதற்காக, அவர் அடிக்கடி புனைபெயர்கள் வைத்துக்கொண்டு மாறுவேடம் பூண்டு தம் காரியங்களை நடத்திவரலானார். அவ ருடைய உண்மைப் பெயர் ஜோஸப் ஜுகாஷ்விலி. எனினும், அவருடைய கடைசி புனைபெயரான ஸ்டாலின் என்னும் பெயரே இப்பொழுது வழங்கிவருகிறது. இந்த மகாநாட் டில் லெனின் தலைமையில் போல்ஷிவிக்குகள் வெற்றி பெற் றனர்.

1907-ம் வருடம் ஜுன் மாதம் 23-ம் தேதியன்று டைப்ளிஸ் தபாலாபீஸிலிருந்து ஒரு பெரிய பண முடிப்பு அரசாங்க பாங்கிக்கு இரண்டு வண்டிகளில் தக்க பந்தோபஸ் துடன் கொண்டு போகப் பட்டது. அச் சமயம் திடீரென்று ஒன்றன் பின் ஒன்றாக ஐந்தாறு வெடி சப்தங்கள் கேட்டன. அதையடுத்து வண்டிகளையும், சோல்ஜர்களையும் புகை சூழ்ந்து கொண்டது. புகை விலகியதும் ஜனங்கள் அங் கொரு கோரக் காட்சியைக் கண்டனர். சுமார் ஐம்பது பேர் காயம் பட்டும், மாண்டும் கிடந்தனர். வண்டிகளி லிருந்த பணப் பைகள் காணப்பட வில்லை. இக் கிராதகச் செயலைச் செய்த குற்றவாளிகளைக் கண்டு பிடிப்பதற்குப் போலீஸார்

பகீரதப் பிரயத்தனஞ் செய்தனர். ஆனால், அவர்கள் எடுத்துக்கொண்ட முயற்சிகள் யாவும் பயனற்றுப் போயின. இக்கோர சம்பவத்தின் விவரங்கள், போல்ஷிவிக் கட்சியினருக்குத் தெரியவும் அவர்கள் மிகுந்த பீதியடைந்தனர். லண்டன் மகா நாட்டில் போல்ஷிவிக்குகள் எவரும் பயங்கரச் செய்கைகளைச் செய்யக் கூடாதென்ற தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருந்தது. தீவிரவாதிகளான போல்ஷிவிக்குகளே கலங்கினரென்றால், மிதவாதிகளான மென்ஷிவிக்குகளின் மனப்பான்மை எப்படி இருந்திருக்குமென்று கூறவேண்டியதில்லை. சில நாட்கள் செல்லவும், ஸ்டாலின்தான் அச் சம்பவங்களுக்குக் காரணமெனத் தெரிய வந்தது. உடனே போல்ஷிவிக்குகளும், மென்ஷிவிக்குகளும், லெனினுக்கு எழுதிக் குற்றவாளியைத் தண்டிக்கவேண்டுமென்று வற்புறுத்தினர். லெனின் ஸ்டாலின் செய்கையை முன்பே அறிந்திருந்தார். எனினும், அவரிடமிருந்த அபார நம்பிக்கையினால், அவரைக் காட்டிக் கொடுக்க முன் வரவில்லை. இப்பொழுது கட்சி அங்கத்தினர்களே விசாரணை நடத்த வேண்டுமென்று வற்புறுத்தவும், லெனின் அவ்வாறே ஒரு விசாரணைக் கமிட்டியை நியமித்தார். விசாரணையில் ஸ்டாலின் குற்றம் நிரூபிக்கப்பட்டது. உடனே ஸ்டாலினும் அவருடைய சகாக்களில் சிலரும் கட்சியிலிருந்து விரட்டப்பட்டனர். லெனின் இத் தண்டனை என்றும் நிரந்தரமாக இருக்க வேண்டு மென்று விரும்பவில்லை. மற்ற அங்கத்தினரின் ஆரவாரத்தை அடக்குவதற்காகச் செய்த தற்காலிகத் தண்டனைதான்.

மேலே கூறப்பட்ட சம்பவங்களால், ஸ்டாலின் தமது வாசஸ்தலத்தை வேறு ஊருக்கு மாற்றிக் கொள்ளவேண்டியதாயிற்று. மேலும், போல்ஷிவிக் கட்சியை ஆதரிப்பவர்களும் டைப்ளிஸில் குறைந்தனர். இதனால் அவர் பாகுவுக்குச் சென்று தம் வேலையைத் தொடர்ந்து செய்யலானார். சிறிது காலத்தில் அங்கிருந்த போல்ஷிவிக்குகளுக்கும் மென்ஷிவிக்குகளுக்கும் சண்டை மூண்டது. ஒரு கட்சி மற்றொரு கட்சியைத் தொலைத்துவிடப் பிரயத்தனம்

செய்தது. ஸ்டாலின் இடைவிடாமல் பிரசாரம் செய்து, பெரும்பான்மையாக விருந்த மென்ஷிவிக்குகளைச் சிறுபான்மைக் கட்சியாகச் செய்து விட்டார். எண்ணெய்த் தொழிற்சாலைகளில் வேலை செய்யுந் தொழிலாளரைத் திரட்டி ஒரு 'சுயேச்சை போல்ஷிவிக்' கட்சியை ஏற்படுத்தினார். அதேசமயம் தம் கட்சிப் பிரசாரத்துக்காக ஒரு பத்திரிகையையும் நடத்தினார். 1907-ம் வருட இறுதியில் எண்ணெய்த் தொழிலாளிகட்கும் முதலாளிகட்கும் தகராறு உண்டாயிற்று. ஸ்டாலின் இப்பொழுது முன் வந்து, முதலாளிகள் சில நிபந்தனைகட்குக் கட்டுப்பட்டால், தாம் சமரசம் செய்து வைப்பதாகக் கூறினார். அவர்கள் அவ்வாறே ஆமோதிக்கவும், சமரசம் ஏற்படுத்தி, ஒரு 'லேபர் பார்லிமெண்டை' நடத்தினார். ஆனால் 'பார்லிமெண்ட்' அதிகாரிகளால் கலைக்கப்பட்டு அதன் அங்கத்தினர்களிற் பலர் சிறைசெய்யப் பட்டனர். ஸ்டாலின் வெளிக்குத் தெரியாமல் அந்தரங்கமாகவே வேலைசெய்து வந்தாராயினும், அவரும் கைது செய்யப்பட்டார். வேலையாட்களைப் புரட்சி செய்யுமாறு தூண்டியதாகக் குற்றஞ் சாட்டப்பட்டு அவர்மீது தொடர்ந்த வழக்கில் போதிய சாட்சியங்கள் இல்லாதபடியால், குற்றம் ருசுவாகாமல் விடுவிக்கப் பட்டார். ஆயினும், அதிகாரிகள் அவருக்கு மூன்று வருடம் தேசப்பிரஷ்ட உத்தரவு விதித்து, ஐரோப்பிய ரஷியாவிலுள்ள ஒரு கிராமத்துக்கு அனுப்பினர்.

ஸ்டாலின் இம்முறை சிறை செய்யப் படுவதற்குச் சில நாட்கள் முன்புதான், போல்ஷிவிக் கட்சியைச் சேர்ந்த ஒரு ஜியார்ஜிய மடந்தையை மணந்துகொண்டு இருந்தார். அம் மங்கையைப் பற்றி அதிகமாக ஒன்றும் தெரியவில்லை. 1908-ல் ஸ்டாலின் காவலிலிருந்தசமயம், அவள் ஒரு ஆண் மகவைப் பெற்றாள். அக் குழந்தைக்கு வயது வந்த பிறகும் கூட, ஸ்டாலினின் பல தரப்பட்ட அலுவல்களால், தாயுடனேயே யிருக்க வேண்டியதாயிற்று.

## 3. ரஷ்யப் புரட்சியில் ஸ்டாலின் பங்கு

1909-ம் வருடம் ஜூலை மாதத்தில் ஸ்டாலின் போலீஸ் பாதுகாப்பிலிருந்து தப்பி யோடினர். செண்ட் பீடர்பர்க்குக்குச் சென்று, அங்கு அவர் தலைவராக சிலகாலம் வசித்து வந்தார். பிறகு, மறுபடி பாகுவிற்குச் சென்று தம் 'தொழிலை' நடத்தலானர்.

மறு வருடம் ஜனவரி மாதத்தில் பாரிஸில் சமதர்ம ஜனநாயகக் கட்சியின் மத்தியக் கமிட்டி கூடிற்று. அதன் அங்கத்தினர்களில் இருவரை அனுப்பி, ஸ்டாலினின் தலைமையில் கட்சியைப் பலப்படுத்தி, புனருத்தாரணம் செய்யத் தீர்மானம் செய்தது. ஸ்டாலின் மத்தியக் கமிட்டியின் அங்கத்தினராக இருப்பதை மறுத்தது மன்றி, தம்மால் ஒன்றும் செய்ய இயலாதென்றுங் கூறிவிட்டார். இவ்வாறு அவர் மறுத்ததற்குக் காரணம், முன்பு சமதர்ம ஜனநாயகக் கட்சியினின்றும் விரட்டப் பட்டதனுல் ஏற்பட்டிருந்த ஆத்திரமேயாகும்.

ஸ்டாலின் சுதந்திரமாக வெகு காலம் திரிய முடியவில்லை. பாதுகாப்பிலிருந்து தப்பித்தோடிவந்த குற்றத்துக்காக அவர் மறுபடியும் ஐந்து வருஷ சிட்சை அளிக்கப்பட்டு 'ஸால்வி செகாட்ஸ்க்' என்னு மிடத்துக்கு அனுப்பப்பட்டார். அவர் எங்கு சென்றாலும் அரசாங்க விரோதமான செய்கைகளை விடுவதில்லை. அங்கிருந்த மக்களிடமும் சமதர்மக் கொள்கைகளைப் பரப்புவதில் முனைந்தார். 1911-ல் அவர் அங்கிருந்து தப்பி, ஸெண்ட் பீடர்ஸ்பர்க்கை அடைந்தார். இப்பொழுதும் மத்தியக் கமிட்டியின் அங்கத்தினர் பதவியை ஏற்குமாறு அவருக்கு அழைப்பு வந்தது. இம்முறை இதை அவரால் நிர்த்தாட்சண்யமாக மறுக்க முடியவில்லை. எனவே, அவர் அப்பதவியை யேற்று, முன்னைவிட அதி தீவிரமாக, கட்சியைப் பலப்படுத்தும் விதத்தில் உழைக்கலானர்.

போல்ஷிவிக், மென்ஷிவிக் கட்சிகளுக்குள் உண்டான விரோதம் நாளடைவில் வளர்ந்து வந்தது. லெனி

னும் அவரது சகாக்களும் சுயேச்சையான போல்ஷிவிக் கட்சி ஒன்று ஸ்தாபிப்பது என்று தீர்மானித்தனர். ஸ்டாலினும் அதை ஆமோதித்தார். இரகசிய தேசீயக் கூட்டமொன்றை பிராகாவில் நடத்துவதற்கு துரிதமாக ஏற்பாடுகள் செய்யப்பட்டன. ஸ்டாலின் பல புனை பெயர்களும் மாறு வேடங்களும் பூண்டு தொழிலாளர்களைச் சந்தித்து, சிதைவுண்டு போயிருந்த கட்சியைப் பலப்படுத்தப் பெருமுயற்சி செய்தார். இத்துடன் அவர் நின்று விடாமல், லெனின் பிரசுரித்து வந்த 'ஸோஷல் டெமாக்ரட்' என்னும் பத்திரிகையிலும் இதுபற்றி அடிக்கடி எழுதி வரலானார். அதிகாரிகள் அவரை மறுபடியும் சிறைசெய்து பாதுகாப்பில் வைத்தனர். இம் முறையும் ஸ்டாலின் அதிகாரிகள் கண்களில் மண்ணைத் தூவி விட்டு தம் இருப்பிடத்துக்கு வந்து சேர்ந்தார்.

முன்னமேயே ஏற்பாடு செய்யப்பட்டிருந்த பிராகா தேசிய மகாநாடு 1912 ஜனவரியில் நடைபெற்றது. இம்மகாநாட்டில் போல்ஷிவிக் மத்தியக் கமிட்டி ஒன்று ஸ்தாபிக்கப்பட்டு, கட்சியின் அங்கத்தினர்களை அதிகரிப்பதற்கும் அதிகாரம் அளிக்கப்பட்டது. ஸ்டாலினும் அக்கமிட்டியில் ஒரு அங்கத்தினரானார். அத்துடன் நான்காவது டூமாவுக்கு நடக்கவிருந்த தேர்தல்களில் போல்ஷிவிக் கட்சியினர் கலந்துகொள்ள வேண்டுமென்றும், சர்க்காரின் அனுமதியுடன் செண்ட் பீடர்ஸ்பர்க்கில் ஒரு பத்திரிகை ஆரம்பிக்க வேண்டுமென்றும் தீர்மானம் செய்யப்பட்டது.

சுயேச்சை போல்ஷிவிக் கட்சியை ஸ்தாபித்த சில மாதங்களுக்குப் பிறகு ஸைபீரியாவிலுள்ள லெனா தங்க வயல்களிலுள்ள தொழிலாளர் வேலைநிறுத்தம் செய்தனர். அதிகாரிகள் தொழிலாளர் தலைவர்களைச் சிறை செய்தனர். தொழிலாளர் மாபெருங் கூட்டமொன்று கூட்டி, தம் தலைவர்களை விடுவிக்க வேண்டுமென்று கோரினர். இத்தகைய பயமுறுத்தலைப் பொறுக்க முடியாத அரசாங்கத்தார் அவர்களை அடக்கும்படி ஒரு படையை அனுப்பினர். இதன் பயனாக, ரஷ்யா முழுவதுமுள்ள தொழிற்சாலை நகரங்கள் அனைத்தி

னும் வேலை நிறுத்தம் செய்யப்பட்டன. லெனினும் ஸ்டாலி னும் இச்சமயத்தை நழுவவிடாது தம் கட்சியைப் பலப்படுத் திக் கொண்டனர். அப்போதே அவர்கள் 'பிராவ்டா' என்ற பத்திரிகையை வேறொருவர் பெயரில் ஆரம்பித்து நடத்தலாயினர். இப் பத்திரிகையில் ஸ்டாலின் கவர்ன் மெண்டை நேர்முகமாகக் கண்டிக்க முடியாதாயினும், மறை முகமாக எதிர்த்து எழுதலானார். 'பிராவ்டா'வுடன் சம்பந் தப்பட்டிருந்த மலினேவ்ஸ்கி என்பவர் ஸ்டாலினின் அத் யந்த நண்பர்போல் நடித்தாராயினும், உண்மையில் போலீசா ரின் உளவாளியாக இருந்தார். அவர் ஸ்டாலின் தான் 'பிராவ்டா'வைப் பதிப்பித்து வெளியிடுகிறார் என்று போலீ சாருக்குத் தகவல் கொடுக்கவும், ஸ்டாலின் சிறைசெய்யப் பட்டு சைபீரியாவிலுள்ள நாரின் என்னும் ஜில்லாவில் காவ லில் வைக்கப்பட்டார். வழக்கப்படி ஸ்டாலின் இங்கிருந்தும் தப்பி யோடிவிட்டார்.

ஸ்டாலின் பாதுகாப்பிலிருந்து தப்பித்து வந்த போது, நான்காவது டூமாவுக்குத் தேர்தல் பிரசாரங்கள் வெகு மும்முரமாக நடந்துவந்தன. ஸ்டாலின் 'பிராவ்டா' வாயிலாக இடைவிடாது தம் கட்சியை ஆதரிக்கும்படி பிரசா ரம் செய்தார். இதைக் கண்ணுற்ற அதிகாரிகள் "பிராவ்டா" வெளிவராதவாறு தடை உத்தரவுகள் பிறப்பித்தனர். ஆனால் மறுநாளே 'பிராவ்டா' வேறொரு பெயருடன் வெளிவர வாரம்பித்தது; இவ்விதம் அது பலமுறை தடை செய்யப்பட் டும்கூட பல பல புதுப் பெயர்களுடன் வெளிவந்துகொண்டே யிருந்தது. தொழிலாளிகள் தேசத்தில் இரண்டு கட்சிகள் இருப்பது கூடாதென்றும் போல்ஷிவிக்,மென்ஷிவிக் கட்சிகள் ஐக்கியப்பட வேண்டுமென்றும் பெரிதும் விரும்பினர். இவ் விருப்பத்தை அவர்களிடமிருந்து அகற்றுவதற்காக ஸ்டா லின் அரும்பாடு பட்டார். முடிவில், தேர்தலில், சமதர்ம ஜனநாயகக் கட்சி பதின்மூன்று ஸ்தானங்களைக் கைப்பற்றி யது. அவற்றில் ஆறு ஸ்தானங்களுக்குப் போல்ஷிவிக்குகள் தேர்ந்தெடுக்கப்பட்டிருந்தனர். இப்போதிருந்து, டூமாவில் போல்ஷிவிக் அங்கத்தினர்கள் நடந்துகொள்ள வேண்டிய

விதத்தைப்பற்றி ஸ்டாலினே ஆலோசனை கூறிவரலானார். எனினும், போலீசார் சிறைசெய்து விடுவார்கள் என்ற பீதியினால், அவர் சுதந்திரமாயிருந்து தம் காரியங்களைக் கவனிக்க முடியவில்லை.

1913-ம் வருட ஆரம்பத்தில், லெனின் விருப்பப்படி ஸ்டாலின் இரண்டு மாதங்கள் அவருடன் கிராகௌ என்னுமிடத்தில் தங்கியிருந்தார். பிறகு அவ்வருடம் மார்ச்சு மாதத்தில், அவர் மாஸ்கோவுக்குச் திரும்பினார். அவர் திரும்பி வரும் செய்தியறிந்த போலீசார் அவரைப் பின் தொடர்ந்தனர். ஸ்டாலின் டூமாவின் அங்கத்தினர்களின் ஒருவருடைய வீட்டில் மறைந்திருந்தார். போலீசார் அவர் வெளி வரும் சமயத்தை எதிர்பார்த்திருந்தனர். இஃதிவ்வாறிருக்க, போல்ஷிவிக்குகள் 'லேபர் ஹால்' என்னுமிடத்தில் ஒரு கச்சேரி வைத்தனர். அவர்கள் இம்மாதிரி அடிக்கடி செய்து, போலீசார் அறியாவண்ணம் தங்கள் காரியங்களைக் கலந்து ஆலோசிக்க சந்தர்ப்பம் செய்து கொண்டனர். இவ்விதம் நடக்கவிருந்த கச்சேரிக்குத் தாமும் வருவதாக ஸ்டாலின் இரகசியமாய்ச் செய்தியனுப்பி யிருந்தார். இதையறிந்த மலினோவ்ஸ்கி, போலீசாருக்கு விஷயத்தை அறிவித்து விட்டார். போலீசாரும் மாறுவேடம் பூண்டு கச்சேரியில் கலந்து கொண்டு, ஸ்டாலினின் வருகையை எதிர்பார்த்திருந்தனர். குறிப்பிட்ட நேரத்தில் ஸ்டாலின் மாறுவேடத்தில் கச்சேரிக்கு வந்தார். ஆனால் அவர் தம்மீது போலீசார் கண்ணோக்கம் வைத்திருப்பதை வெகு விரைவில் ஊகித்துணர்ந்து, அங்கிருந்து தப்பித்துக்கொள்ள முயன்றார். அம் முயற்சி வீணாகி, போலீஸார் கையிற் பிடிபட்டு, பீடர்ஸ்பர்க் சிறையில் காவலில் வைக்கப்பட்டார்.

1914-ல் உலக மகாயுத்தம் ஆரம்பித்துவிட்டது. ரஷ்யா சண்டையிடும் தேசங்களில் ஒன்றாக ஆகியது. ஒவ்வொரு ஐரோப்பிய தேசத்திலுமிருந்த சமதர்ம வாதிகள் தத்தம் தாய்நாட்டை ஆதரித்து யுத்தக் கடன்களுக்கு ஓட்டுக் கொடுத்தனர். ஆனால் ரஷ்யாவிலோ லெனினும், பெரும்பான்மையான சமதர்ம வாதிகளும் தங்கள் தேசம் சண்டையில்

கலந்துகொள்வதைப் பலமாகக் கண்டிக்கலாயினர். ஸ்டாலி னுக்கு லெனினுடன் இரகசியப் போக்குவரத்து செய்வதற்கு வசதிகள் ஏற்பட்டபோதினும், அவர் அவற்றைப் பயன் படுத்திக் கொள்ளாததுடன், தம் பழைய சட்டவிரோதமான செய்கைகளேயும் விடுத்து, புது மனிதராக மாறினர். அவர் அரசியலே அறவே மறந்து இயற்கைத் தேவியின் எழிலேக் கண்டு மகிழ்வதில் காலங் கழிக்கலானர். இப்புதிய மாறுதல் லெனினுக்கும் அவருடைய சகாக்களுக்கும் அளவிலா வியப்பையும் திகைப்பையும் அளித்தது.

மகா யுத்தம் ஆரம்பித்த இரண்டாவது வருடம் டுமாவே, அரசாங்கத்துக்கு விரோதமாகக் கிளம்பியது. ஜார் அடிக்கடி புதிய மந்திரிகளே நியமித்துக்கொண்டே யிருந் தார். இவ்வமயம் சேனேக்கு ஆள் திரட்டவேண்டியது அவசிய மாயிற்று. வடக்கு ஜில்லாக்களிலிருந்த ஆண்கள் அனைவரும் இராணுவ சேவை செய்ய முன்வர வேண்டுமென்று உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. இதனல் ஸ்டாலினும் தம் பெயரைப் பதிவு செய்துகொள்ளவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. ஆனல், அவர் இராணுவ டாக்டர்களால் பரிசோதிக்கப்பட்ட போது, இடதுகை திருகியிருந்ததால், இராணுவத்துக்குத் தகுதியுள்ளவ ரல்லரென்று தள்ளப்பட்டார். ஆர்டிக் வட்டத்துக்கு மறுபடி அனுப்பப்பட்டார். யுத்தம் ரஷ்யா வின் சார்பில் சரிவர நடத்தப்படாதபடியால், நிலைமை மிக மோசமாகியது. உள்நாட்டிலும் கலகமும் குழப்பமும் அதிக மாகியது. யுத்தத்தில் பலாத்காரமாக ஈடுபடுத்தப்பட்டவர் கள், போர்முனையில் ஆயுதமும் ஆகாரமும் இல்லாமல் அநியாயமாய் மடிந்துவந்ததுபோல், உள்நாட்டிலும் வறுமை யும் பஞ்சமும் அதிகமாகியதால், மக்கள் பட்டினியாலும் பசியாலும் தவித்து வந்தனர். எனவே பட்டினிப் பட்டா ளங்களான ஏழைகளும், தொழிலாளிகளும் உண்ணும் உண வின்பொருட்டு, கலகஞ் செய்ததில் ஆச்சரியமில்லை. இக்கல கம் பெரும்புரட்சியாகி, 8-3-1917-ந் தேதியிலிருந்து 12-3-1917-ந் தேதிவரை நீடித்து ரஷ்யாவை அல்லோல கல்லோலமடையச் செய்துவிட்டது. இதுபோன்ற புரட்சி

ரஷ்யாவில் மட்டுமல்ல; உலகெங்குமே இதுவரை நடந்த தில்லை எனலாம். பிரசித்திபெற்ற பிரஞ்சுப் புரட்சிகூட இந்தப் பெரும் புரட்சிக்கு முன் ஒன்றுமில்லை என்று கூறின் மிகையாகாது. இப்புரட்சி உலக முடிவில் நிகழும் ஊழிக் கூத்தோ என்று அதிசயித்துப் பயமடையத் தக்கதாக இருந்தது. யுகாந்த காலத்திலும் இவ்விதப் பயங்கரக் காட்சியைக் காண முடியாது. இப்புரட்சி சமயத்தில் ஜார் பெட்ரோ கிராடில் இல்லை. போர்க்களத்தில் தாமே சேனதிபதியாய் இருந்து படைகளை ஏவி யுத்தஞ் செய்து வந்தார். தலைநகரி லும் மற்றுஞ் சில இடங்களிலும் கலகம் நடக்கிறதென்று தகவல் அறிந்ததும், சர்வ சாதாரணமானதென்று கருதி, இருக்குமிடத்திலிருந்தே தடையுத்தரவுகள் பிறப்பித்துக் கொண்டிருந்தார். பெட்ரோகிராடில், சர்க்காரே இல்லாத போது அரசனது உத்தரவு எப்படி அமுலுக்கு வரும்? கடைசியில், ஜார் பெட்ரோகிராட்டுக்கு ரயிலில் திரும்ப முயற்சித்தார். ரயில் இடையே தடுக்கப்பட்டுவிட்டது. நிலைமை மிக விபரீதமாய்ப் போய்விட்டதென்று கூறி, பட்டந் துறந்துவிடும்படி, ஜாரை மந்திரிகளும் சேனைத் தலைவர்களும் பிரபுக்களும் வேண்டிக்கொண்டார்கள். வேறு வழியின்றி, ஜார், தமக்குப்பின் வேறொருவரை ஜாராக நியமித்து முடி துறந்தார். இவ்விதமாக, 1917-ம் வருடம் மார்ச்சு மாதத்தில் ஜார் இரண்டாம் நிக்கோலஸ், சிம்மாசனத்தைவிட்டு உயிர் தப்பி யோடவேண்டியதாயிற்று. உடனே கெரன்ஸ்கி என்பவர் குடியரசை ரஷ்யாவில் ஸ்தாபித்து, அரசாங்கத்தை நடத்தலானர். அவரே குடியரசின் தலைவருமானர்.

மேற் கூறப்பட்ட சம்பவங்கள் ரஷ்யாவில் நடந்து கொண்டிருக்கையில் முக்கிய புருடர்களாகிய லெனின், டிராட்ஸ்கி ஆகிய இருவரும் அயல் நாட்டிலும், ஸ்டாலின் தேசப்பிரஷ்டஞ் செய்யப்பட்டு பாதுகாப்பிலும் இருந்தனர். ஜாரின் ஆட்சி வீழ்ந்ததைக் கேள்வியுற்ற லெனின் ரஷ்யாவுக்குள் செல்வதற்கு அனுமதிச் சீட்டு பெறுவதற்கு முயற்சித்தார். இதற்கிடையில் ஸ்டாலினும் தம் பாதுகாப்பு

ஸ்தலத்திலிருந்து வெளியேறி, பெட்ரோகிராடை அடைந்தார். ஜார் பட்டம் துறந்தபின்பு, 'பிராவ்டா' மறுபடி தொடங்கப்பட்டது. ஸ்டாலின் அதன் பத்திராதிபர் ஆனார். அவர் 'பிராவ்டா'வின் மூலமாக தம் தோழர்களை கெரன்ஸ்கியின் கவர்ன்மெண்டை ஆதரிக்குமாறு தூண்டினார். சில நாட்கள் சென்றபிறகு ஸோவியத் ஆலோசனைக் கமிட்டியில் அவர் ஒரு அங்கத்தினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

லெனின் ரஷ்யாவுக்குள் இன்னும் வந்து சேரவில்லை. அதுசமயம் ஸ்டாலின் தம் தலைமையில் ஒரு தீவிரவாதிகள் கூட்டத்தைக் கூட்டினார். லெனின் இல்லாமல் கூடிய கூட்டங்களில் இதுவே முதலாவதாகும். ஸ்டாலின் தற்காலிகமாக அமைக்கப்பட்டுள்ள அரசாங்கத்தை யாவரும் ஆதரிக்க வேண்டுமென்றும், அது எவ்வளவுதூரம் புரட்சியைப் பூர்த்தி செய்கிறதோ, அதுவரை ஆதரவு அளிப்பது அவசியமென்றும் வற்புறுத்திக் கூறினார். இக்கூட்டத்தில், மென்ஷிவிக்குகளுடன் சமரசம் செய்துகொள்ள வேண்டுமென்றும் ஒரு தீர்மானம் கொண்டுவரப்பட்டது. ஸ்டாலின் அதற்கிசைந்து, அதற்குரிய முறைகளைப்பற்றி ஆலோசிக்கலானார். கூட்டம் ஆரம்பித்த நான்காவது தினத்தன்று, லெனின் அங்கு வந்து சேர்ந்தார். அவர் அங்கு நிறைவேறிய தீர்மானங்களைக் கண்டித்ததுமன்றி, தற்காலிக அரசாங்கத்தை எதிர்த்துப் போராட வேண்டுமென்றும் கூறினார். ஸ்டாலின் இதற்கெதிரிடையான நோக்கத்தைக் கொண்டிருந்தாராயினும், தம் குருவை எதிர்க்கும் தைரியமின்றி வாளாவிருந்தார்.

ரஷ்யாவில் அரசர் ஆட்சி வீழ்ந்ததிலிருந்து இரண்டு பலம் பொருந்திய கட்சிகள் தோன்றின. அவற்றில் ஒன்று பணக்காரர்களையும் முதலாளிகளையும் கொண்ட டூமா; மற்றொன்று விவசாயிகளையும், தொழிலாளரையும் கொண்ட ஸோவியத். தற்காலிக அரசாங்கம் இவ்விருதரத்தாருக்கும் சமரசம் செய்ய முயற்சிக்கவில்லை. மேலும் ஸ்டாலின், லெனின், டிராட்ஸ்கி ஆகியோரின் எதிர்ப்பும் அதிகரித்தது. ஸ்டாலினின் விடாமுயற்சியால் கலகத்துக்கு எல்லாம் தயாரா

யிருந்தன. இப்போது கெரன்ஸ்கி தேசீய ஜனநாயக மகாநாடு ஒன்று கூட்டுவதாகப் பிரரேபித்தார். ஆனால், லெனின், டிராட்ஸ்கி, ஸ்டாலின் முதலியோர் இம்மகாநாட்டைப் பகிஷ்காரம் செய்தனர்.

7-11-1917-ந் தேதி யன்று, போல்ஷிவிக்குகள் கலகத்தை யாரம்பித்தனர். டிராட்ஸ்கியின் தலைமையில் போல்ஷிவிக் படைகள் அரசாங்கப் படைகளை எதிர்த்துத் தோற்கடித்தது. மந்திரிகள் கைது செய்யப்பட்டு, தூக்கி விடப்பட்டனர். கெரன்ஸ்கி உயிர் தப்பி யோடினார். பெட்ரோகிராட் கலகக்காரர்கள் கையில் விழுந்தது. சில மணி நேரங்கட்குப் பிறகு, லெனின் தலைமையில் சோவியத் அரசாங்கம் ஸ்தாபிக்கப் பட்டது. டிராட்ஸ்கி யுத்த மந்திரியாகவும், ஸ்டாலின் அந்நிய நாட்டு மந்திரியாகவும் நியமிக்கப் பட்டனர். உடனே லெனின் ரஷ்யாவிலுள்ள நிலங்கள் யாவும் விவசாயிகளுக்குக் கொடுக்கப்படும் என்று பறை யறைவித்தார். யுத்த சேனாதிபதிக்குச் செய்தி யனுப்பி, சண்டையை நிறுத்தி, ஜெர்மானியருடன் ராஜி பேசும்படி உத்தரவிட்டார். சேனாதிபதி இப் புதிய அரசாங்கத்தை மதிக்க மறுக்கவும், லெனின் அவரைச் சேனாதிபதி பதவியினின்றும் நீக்கிவிட்டு, வேறொருவரை அந்த ஸ்தானத்துக்கு நியமனஞ் செய்தார். பிறகு டிராட்ஸ்கியை யனுப்பி, பிரெஸ்டு லிடாங்ஸ்க் என்னுமிடத்தில் ஜெர்மானியருடன் சமாதானம் செய்து கொண்டார். டிராட்ஸ்கி ஜாரின் இராணுவப் படையைக் கலைத்துவிட்டு, பிரசித்தி பெற்ற "செம்படை"யை ஸ்தாபித்தார்.

## 4. பதவி மோகமும் பழி வாங்கலும்

1918-20-ம் வருடங்களில் பெரும் உள் நாட்டுப் போர் நடந்தது. தொன்றுதொட்டு பழக்கத்தி லிருந்து வந்த முறைகளை ஒரே நாளில் ஒழித்து, புதியனவற்றைப் புகுத்த முயற்சித்த போல்ஷிவிக்குகளுக்குப் பலமான எதிர்ப்பு ஏற்பட்டது. எனவே, ரஷ்யாவின் பல பாகங்கள் சுயேச்சை சமஸ்தானங்களாகப் பிரியலாயின. மேலும் முத

லாளிகளால் ஆதரிக்கப்பட்ட கூட்டத்தினர் ஸோவியத் அரசாங்கத்தை எதிர்த்துக் கலகம் புரிந்தனர். லெனின் நாலா பக்கத்தையும் சமாளிக்க வேண்டி வந்தது. தென் பாகங்களில் நடந்த கலகங்களை யடக்க ஸ்டாலின் அனுப்பப் பட்டார். ஸ்டாலின் எவ்வளவோ முயன்றும் நிலைமை மோசமாகிவிட்டது. இப்பொழுது லெனின் ஸ்டாலினை அழைத்து டிராட்ஸ்கியை யனுப்பி, நிலைமையைச் சமாளிக்கச் செய்தார். இப்பொழுதிருந்தே ஸ்டாலினுக்கும் டிராட்ஸ்கிக்கும் விரோதம் ஆரம்பித்த தென்னலாம். ஏனெனில், டிராட்ஸ்கி, ஸ்டாலினைப் பற்றிக் குறைகூறி லெனினுக்குத் தெரிவித்திருந்தார். ஸ்டாலினும் டிராட்ஸ்கியை நம்பலாகா தென்று, கோள் சொன்னார். லெனின், இவ் விருவர்களிடையும் உண்டான மனஸ்தாபத்தை நீக்க எவ்வளவோ முயன்றும் வெற்றி பெற வில்லை. பிறகு கிழக்குப் போர் முனையில் தலைமை வகித்த டிராட்ஸ்கி, சில தளபதிகளைத் தக்க காரணமின்றி நீக்கி விட்டார். ஸ்டாலின் இவற்றை லெனினுக்குத் தெரிவித்து, மொத்தத்தில் தளபதிகளின் நன்றியறிதலைப் பெற்றார். திடீரென்று வடக்குப் போர் முனையில் நிலைமை மோசமாகி விடவே, டிராட்ஸ்கி அங்கு சென்று தம் முழு கவனத்தையும் செலுத்தினர். எனினும், யாதொரு வெற்றியும் கிட்ட வில்லை. இச் சமயத்தில் லெனின் ஸ்டாலினை அப் போர் முனைக்கு அனுப்பினர். ஸ்டாலின் திறமையுடன் சேனையை நடத்தி வெற்றி பெற்றார். இது அவருக்கும் டிராட்ஸ்கிக்கும் இருந்த விரோதத்தை அதிகப் படுத்திற்று.

ஸ்டாலின் தம்முடைய பல இராணுவ அலுவல்களுக்கிடையே, தம் மனைவியை விலக்கிவிட அதிகாரம் பெற்று, தன் சகாவின் குமாரத்தியாகிய நாடியா அல்லிலூவா என்பவளை இரண்டாந் தாரமாக மணந்து கொண்டார்.

1922-ம் வருடம் மார்ச்சு மாதம் போல்ஷிவிக் கட்சியின் பதினோராவது காங்கிரஸ் நடைபெற்றது. இக் காங்கிரஸில் ஸ்டாலின், கட்சியின் பொதுக் காரியதரிசியாகத் தேர்ந்தெடுக்கப் பட்டார்.

பதினேருவது காங்கிரஸ் நடைபெற்ற சில நாட்களுக்கெல்லாம், லெனின் வியாதியில் விழுந்தார். அவருடைய தேக நிலேயும் கவலேக் கிடமாகி வந்தது. இந்த சமயத்தில், ஜியார்ஜியாவில் ஒரு வாதப் பிரதிவாதம் தோன்றலாயிற்று. ஒரு பகுதியினர் தனிப்பட்ட ஸோவியத் ஜியார்ஜியா வேண்டுமென்றும், மறறொரு பகுதியினர் இதை எதிர்த்தும் வாதித்தனர். முற்பகுதியினருக்கு லெனினின் ஆதரவு இருந்தது. வியாதியில் கிடந்த லெனினுக்கு இவ் விஷயத்தைப் பற்றி அடிக்கடி தெரிவியாமல், ஸ்டாலின் தாமே நடவடிக்கைகள் எடுத்துக் கொண்டார். முதற் பகுதியினருக்குச் சாதகமாயிருந்த உத்தியோகஸ்தர்கள் அனேவரையும் ஸ்டாலின் நீக்கிவிட்டு தம் கட்சியினரையே முக்கிய உத்தியோகங்களில் நியமித்தார். லெனினுக்கு இது தெரிய வரவும், ஸ்டாலினே மிகவும் கடிந்து கொண்டார்.

நாட்கள் செல்லச் செல்ல ஸ்டாலினுக்கும், டிராட்ஸ்கிக்கும் ஏற்பட்ட விரோதம் முற்ற வாரம்பித்தது. ஒருவர் மற்றொருவரை ஒழித்துவிடக் கங்கணங் கட்டிக் கொண்டனர். டிராட்ஸ்கி யுத்த மந்திரியாக, தம் அதிகாரத்தைச் செலுத்துவதிலேயே மோகங்கொண் டிருந்தார். ஸ்டாலின் தம் சொந்த வழியில் படாடோப மில்லாம லிருந்து தம்மைப் பெரும்பான்மையோர் ஆதரிக்கும்படி நடந்து கொண்டார்.

21-1-1924-ல் லெனின் இம் மண்ணுலக வாழ்வை நீத்தார். அவ் வமயம் டிராட்ஸ்கி தேக சௌக்கியத்துக்காக காகஸிஸில் சிலநாள் கழிப்பதற்காகச் சென்றிருந்தார். லெனின் இறந்தபோது, ஸ்டாலின் தான் தலேநகரி லிருந்தார். இறந்த செய்தி கேட்டவுடன், அதை 18 மணி நேரம் வெளியிடவே யில்லே. பின்பு அவர் டிராட்ஸ்கிக்கு இச் சமாசாரத்தைத் தெரிவித்து, மறுநாள் லெனின் தேகம் அடக்கம் செய்யப்படும் என்றும் கூறினர். ஆனல் உண்மையில் இரண்டு நாட்கள் சென்றபிறகே பிரேதம் அடக்கம் செய்யப்பட்டது. ஸ்டாலின் டிராட்ஸ்கியைத் தம் பரம விரோதியாகப் பாவித்தா

ராதலால், லெனின் தேகம் அடக்கம் செய்யப்படுவதற்கு முன் அவர் வருவதை விரும்ப வில்லை.

லெனின் மரிக்கும் முன்பு ஒரு மரண சாஸனத்தை எழுதிவைத்திருந்தார். அச் சாஸனம் போல்ஷிவிக் மகா நாட்டில் படிக்கப்பட வேண்டும். அதில் சில முக்கியமான போல்ஷிவிக் தலைவர்களைப்பற்றிய "வண்டவாளங்கள்" குறிக்கப்பட்டிருந்தன. இதைக் கட்சியினர் அனைவரும் தெரிந்துகொள்வதை ஸ்டாலின் விரும்பவில்லை. தம்மை எதிர்க்கக்கூடியவர்கள் எவர் எவரிருந்தனரோ அவர்களையெல்லாம் காங்கிரஸ் கூடுவதற்கு சில மாதங்களுக்கு முன்பே அயல் நாடுகளுக்கு அரசாங்க அலுவலாக அனுப்பிவிட்டார். எஞ்சியிருந்த கட்சி அங்கத்தினர்கள் யாவரும் தம்மை ஆதரிக்கும்படி முன்கூட்டியே பிரசாரம் செய்து வைத்திருந்தார். காங்கிரஸ் கூடியவுடன் சாஸனத்தை மகாநாட்டில் படிக்காமல், தம்மை ஆதரிப்போர் நிறைந்துகிடந்த கமிட்டியின் முன்பு படித்தார். அதில் ஸ்டாலினைப் பற்றிப் பின்வருமாறு எழுதப்பட்டிருந்தது :—

"ஸ்டாலின் கமிட்டியின் காரியதரிசியாகத் தேர்ந்தெடுக்கப் பட்டதால் அநேக அதிகாரங்களை அவர் வகிக்கிறார். அவ்வதிகாரங்களை எப்படி உபயோகிப்பது என்பதைப்பற்றி அவர் அறிவார் என்று நான் கூறுவதற்கில்லை. அவர் சில சமயங்களில் மிகவும் முரட்டுத்தனமாக நடந்துகொள்கிறார். இது காரியதரிசிப் பதவிக்கு ஏற்றதல்ல. சந்தர்ப்பம் வாய்க்கும்போது அவரைக் காரியதரிசி பதவியினின்றும் நீக்கிவிட வேண்டுமென்று தோழர்களுக்குச் சிபார்சு செய்கிறேன்." சாஸனத்தின்படிக்கு, ஸ்டாலின் தம் பதவியை ராஜீநாமா செய்வதாகக் கூறினர். ஆனால், அவர் எதிர்பார்த்தபடியே, அவருடைய சகாக்கள், லெனின் புத்தி தடுமாற்ற முற்றிருந்த நேரத்தில் ஸ்டாலினைப்பற்றி அவ்வாறு எழுதியிருக்க வேண்டுமென்றும், அதைப் பொருட்படுத்தி, காரியதரிசிப் பதவியை ராஜிநாமா செய்யலாகாதென்றும் வற்புறுத்தினர். முடிவில் அவர்கள் ஸ்டாலினையே பழைய படி பொதுக் காரியதரிசியாகத் தேர்ந்தெடுத்தனர்.

தின்மூன்றும் காங்கிரசுக்குப் பிறகு, டிராட்ஸ்கியை ஒழிப்பதையே முக்கிய நோக்கமாகக் கொண்டு ஸ்டாலின் மும்முரமாக வேலை செய்யலானார். 'செம்படை'யைச் சீர் திருத்தம் செய்கிற வியாஜத்தைக் கொண்டு டிராட்ஸ்கி அமர்த்தியிருந்த தளகர்த்தர்களை யெல்லாம் வீட்டிற்கனுப்பி விட்டு, தம்மை ஆதரிப்பவர்களை அந்த ஸ்தானங்களில் அமர்த்தினார். 1924 நவம்பரில் ஸோவியத் அரசாங்கத்தின் ஏழாவது வருடாந்திரக் கொண்டாட்டம் நடைபெற்றது. அச்சம்பவத்தை நினைவுறுத்துவதற்காக, டிராட்ஸ்கி, 1917-ம் வருட நிகழ்ச்சிகளைப்பற்றி, "அக்டோபர் படிப்பினைகள்" என்ற முன்னுரையுடன் ஒரு புத்தகம் எழுதி வெளியிட்டார். அதில் போல்ஷிவிக்குகள் அதிகாரமெய்திய விதத்தைப் பற்றிக் கேவலமாகக் கூறப்பட்டிருந்தது. அந்தப் புத்தகத்தைப் படித்தவர்களில் அநேகர் டிராட்ஸ்கியை எதிர்க்க வாரம்பித்தனர். பிரசங்க மேடைகளிலும், பத்திரிகைகளிலும், நாட்டிலும், நகரிலும் அவர் வெகுவாகக் கண்டிக்கப்பட்டார். உடனே அவரை மத்தியக் கமிட்டி அங்கத்தினர் பதவியிலிருந்து விலக்கிவிட வேண்டுமென்று கிளர்ச்சியுண்டாயிற்று. ஸ்டாலின் இக் குழப்பத்தைத் தம் சொந்த விருப்பு வெறுப்புகளுக்குப் பயன்படுத்திக்கொண்டு,டிராட்ஸ்கி தம் யுத்த மந்திரி வேலையை ராஜினாமாச் செய்தால் மட்டும் போதுமென்று கூறினார். 1925-ம் வருடம் ஜனவரி மாதம் டிராட்ஸ்கி மந்திரி வேலையை ராஜினாமா செய்யவேண்டியது அவசியமாயிற்று.

சிலமாதங்கட்குப் பிறகு, மத்தியக்கமிட்டியின் அங்கத்தினருள் ஒருவரும், அப்போதைய யுத்த மந்திரியுமான ஒருவர், இரகசியமான ஓரிடத்தில், ஒரு கூட்டம்கூடி, ஸ்டாலினை ஒன்றுசேர்ந்து எதிர்ப்பதற்கு என்னென்ன செய்யலாம் என்பதைப்பற்றி விவாதித்தார். அவர்கள் டிராட்ஸ்கியை அடைந்து தமக்குத் தலைவராயிருக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டனர். அவர் அவ்வாறே ஏற்றுக்கொண்டு, பல சில்லரைக் கட்சிகளையும் ஒன்றுபடுத்தி, ஒன்றுபட்ட எதிர்ப்பை நடத்தினார். இத்தகைய எதிர்ப்பை முளையிலேயே

கிள்ளி யெறிவதற்கு வேண்டிய அடக்குமுறைகளை ஸ்டாலின் கையாண்டார். டிராட்ஸ்கியையும் அவருடைய சகாக்களையும் போல்ஷிவிக் கட்சியினின்றும் துரத்தும்படி செய்தார். மறுமாதமே டிராட்ஸ்கியைத் தேசப்பிரஷ்டம் செய்து மத்திய ஆசியாவில் வாசம் செய்ய அனுப்பினர். எவரெவர் தம்மை எதிர்க்கக்கூடுமென்று சந்தேகித்தாரோ, அவர்களை யெல்லாம் ஸ்டாலின் காவலில் வைத்தார்.

டிராட்ஸ்கி பாதுகாப்பில் சிறைவாசம் அனுபவித்து வந்த இடத்திலிருந்து, தம் சகாக்களுடன் கடிதப் போக்கு வரவு வைத்துக்கொள்ள வசதி செய்துகொண்டார். மேலும் ஸ்டாலினல் அயல் நாடுகளுக்குத் துரத்தப்பட்ட தம் தோழர்களுக்கு ஸ்டாலினைக் குறித்து என்னென்ன தகவல்கள் கிடைக்குமோ அவற்றை யெல்லாம் தெரிவித்து, ஆங்காங்கு ஸ்டாலினின் 'குட்டை' வெளிப்படுத்தும்படி ஏற்பாடு செய்தார். இவைகளையெல்லாம் அறிந்த ஸ்டாலின் டிராட்ஸ்கியிருக்கும்வரை தாம் நிம்மதியுட னிருக்க முடியாதென்று அறிந்து 1929-ல் டிராட்ஸ்கியை கான்ஸ்டான்டிநோபிளில் கொண்டுபோய் விட்டுவிடுமாறு அவர் உத்தரவிட்டார். பிறகு துருக்கி கவர்ன்மெண்டாரிடம் மனுச்செய்து, அவரை அங்கிருந்தும் துரத்தும்படியும் கேட்டுக்கொண்டார். அவ்வாறே டிராட்ஸ்கி கான்ஸ்டான்டி நோபிளிலிருந்தும் துரத்தப்பட்டார். ஆகவே அவர் பின்னர் அமெரிக்காவிலுள்ள மெக்ஸிகோவில் இருந்தார். அங்கிருந்த அவர் ஸ்டாலினைப் பற்றிய 'வண்டவாளங்களை' அடிக்கடி எழுதி வரலானர். ஆனல், அங்கு 1940-ம் வருஷம் நவம்பர் மாதத்தில் ஒரு வெறியனல் தாக்கப்பட்டு, டிராட்ஸ்கி உயிர் துறந்தார். இதன் பின்னர் தம்மை எதிர்க்கக் கூடியவர்களை ஒருவர் பின் ஒருவராக, ஸ்டாலின் ஒழித்துவிட்டார். தம்மை எதிர்ப்பவர்கள் ஒருவருமில்லாமற் போகவும், எதிர்கட்சியாரின் வேலைத்திட்டத்தின்படி நடக்கலானர். அவ்வாறு செய்வதால் நாட்டில் எதிர்ப்பு எங்கேனும் இருந்தால்கூட அதுவும் தானகவே அடங்கி விடுமென்று நினைத்தார்.

## 5. சர்வாதிகாரப் பதவியும் சாகஸச் செயல்களும்

ஸ்டாலின் ரஷ்யாவில் செய்தவற்றைக் கொஞ்சம் நிறுத்திவைத்து, அயல் நாடுகளுடன் எவ்வித சம்பந்தம் வைத்துக்கொண் டிருந்தார் என்பதைச் சற்று கவனிப்போம். 1927-ல் சீனாவில் நடந்த சர்வதேசப் பொதுவுடைமை மகா நாட்டின் செய்கைகள் ஸ்டாலினின் மனதில் பரபரப்பை யுண்டாக்கியது; ரஷியாவைத் தாக்குவதற்காக ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருவதாக அவர் பயந்தார். இதற்கு ஏற்றாற் போல் திடீரென்று சீனாவிலிருந்த சோவியத் ஸ்தானீகரின் காரியாலயம் சீனப் போலீசாரால் சோதனை செய்யப்பட்டது; சற்றேறக்குறைய இதே சமயத்தில் போலந்தின் சோவியத் ஸ்தானீகர் 'வெள்ளை' ரஷ்யன் ஒருவனால் வார்ஸாவில் கொலை செய்யப்பட்டார். ஆகவே, மற்றொரு யுத்தத்துக்கு, அதாவது ஸோவியத் ரஷ்யாவுக்கு எதிராக, ஆயத்தங்கள் செய்யப்படுவதாக உணர்ந்தார். கிரேட் பிரிட்டன் அதில் சம்பந்தப்பட் டிருப்பதாகச் சந்தேகித்தார். உண்மையில் அவ்விதமான காரியம் எதையும் பிரிட்டன் செய்யவில்லை. எனினும் 'சந்தேகப் பிராணி'யான ஸ்டாலின், ஜப்பானுக்கு ஒரு புதிய ஸ்தானீகரையனுப்பி, எப்பாடு பட்டாயினும் ஜப் பானும் பிரிட்டனும் சேர்ந்து சீனப் புரட்சியில் இறங்கித் தம் ஆதிக்கத்தைக் காட்டாவண்ணம் செய்வதற்கு வேண்டிய முயற்சிகளைச் செய்யும்படி சொன்னார். ஜப்பான், சீனா விவ காரங்களில் தலையிடாமலிருந்தால், விளாடி வாஸ்டாக்கை ஜப்பானியருக்குக் கொடுத்து விடுவதாகவும் வாக்களித்தார். ஸ்டாலின் இவ்வளவுதூரம் சீனாவை ஆதரித்ததற்குக் கார ணம், சீனாவும் போல்ஷிவிக் மயமாகிவிடும் என்ற எண்ணத் தினால்தான்.

சிறிது காலத்துக்குப் பின் சீனா போல்ஷிவிஸத்துக்கு விரோதமாகக் கிளம்பியவுடன், ஸ்டாலின் அவசர அவசர மாக ஜப்பானுடன் ஒருவரையொருவர் தாக்குவதில்லை யென்ற ஒப்பந்தத்தைச் செய்துகொண்டார். பிறகு பிரான்ஸின் நேசத்தைப் பெற வழி தேடினார். பிரான்ஸின் சகாவா யிருந்த ருமேனியா, பெஸ்ஸரேபியாவைப் பெறுவதற்கு

ஸ்டாலின் பெருமுயற்சி செய்தார். இதன் பயனுக, பிரான்ஸுக்கும் ரஷ்யாவிக்கு மிருந்துவந்த 'கடன் பிரச்சினை'யை வெற்றிகரமாகத் தீர்த்துக்கொண்டார். பழைய கடன்களை மிகக் குறைந்த மதிப்புப்போட்டு, இதனுல் பிரான்ஸிட மிருந்து புதுக் கடன்கள் பெற்ருர்.

ஜெர்மனியில் சர்வாதிகார வெறிபிடித்த ஹிட்லரும், இத்தாலியில் 'முத்தண்ணு' முஸோலினியும் பதவிக்கு வரவும், ஸ்டாலின் அவர்களை ரஷ்யாவின் இரு பரம விரோதிகளாக மதித்தார். ஏனெனில் அவர்களுடைய கொள்கைகளும் செய்கைகளும் போல்ஷிவிஸத்துக்கு நேர்விரோதமா யிருந்தன. உடனே ரஷ்யச் சேனையைச் சீர்திருத்திப் புதிய முறைகளில் பயிற்சியளிக்க ஏற்பாடுகள் செய்தார். தமக்கு வெளிநாடுகளில் பொதுவுடைமைக் கொள்கை பரவ சம்மதமில்லாதவர்போல் காட்டிக்கொண்டு, ஸோவியத் அரசாங்கத்தை பிரிட்டனும், அமெரிக்காவும் அங்கீகாரம் பண்ணும்படி செய்தார். செக்கோஸ்லோவேகியா, பிரான்ஸ் ஆகிய தேசங்களுடன் 'பரஸ்பர உதவி ஒப்பந்தங்'களைச் செய்து கொண்டார். பிரிட்டனுடனும் உறவு கொண்டாடலானுர். இது காரணமாக பிரிட்டிஷ் அயல்நாட்டு மந்திரியான மிஸ்டர் அந்தோணி ஈடன் ரஷ்யாவுக்கு விஜயம் செய்தார். மேலும் பிரிட்டன் முதலிய தேசங்களின் பிரயத்தினத்தின்பேரில் ரஷ்யாவையும் சர்வதேச சங்கத்தில் சேர்த்துக் கொள்ளுமாறு செய்தார்.

1939-ம் வருட ஆரம்பத்தில் ஜெர்மனியின் சர்வாதிகாரி ஹிட்லர், மியூனிச் ஒப்பந்தத்துக்கு விரோதமாக ஸெக்கோஸ்லோவேகியாவில் தம் பயங்கரப் படையை யனுப்பி, அதைத் தம் வசமாக்கிக் கொண்டார். இவ்வாறு அவர் ஒவ்வொரு தேசமாக கபளீகரம் பண்ணிக்கொண்டு வருவதைக் கண்ணுற்ற பிரிட்டன், பிரான்ஸ், ரஷியா ஆகிய தேசங்கள் ஒரு ஒப்பந்தத்தைச் செய்துகொண்டு, ஹிட்லரின் முன்னேற்றத்தைத் தடுக்க வேண்டுமென்று நினைத்து ஒப்பந்தப் பேச்சுகள் நடத்தின. ஒரு சமயத்தில், பேச்சுகள் வெற்றிகரமாக முடிந்து விட்டனவென்றும், ஜெர்மனியின் பாடு இனிமேல் அதோகதிதான் என்றும் வதந்திகள் பரவின. ஆனுல் துர

திர்ஷ்டவசமாக, கோரிய ஒப்பந்தம் செய்துகொள்ள வியலாமற் போயிற்று. ஸ்டாலின், போலந்தின் மூலமாக தம் துருப்புகளை நடத்திச்செல்ல அனுமதி கேட்டார். பிரிட்டனின் நேசதேசமாகிய போலந்து இதை மறுத்தது. ஆகவே, பேச்சுகள் முறிந்து போயின.

அதே வருடம் செப்டம்பர் மாதத்தில் 'ஓநாய் நியாயம்' கூறிக்கொண்டு வெறியரான ஹிட்லர் போலந்துமீது படையெடுத்தார். பிரிட்டிஷார் போலந்துக்குச் செய்திருந்த வாக்குதத்தத்தைக் காப்பாற்றுவதற்காக ஜெர்மனியுடன் போர் தொடுத்தனர். பிரான்சும் பிரிட்டனும் சேர்ந்து ஜெர்மனியை எதிர்க்கத் தயாராக விருந்தது. இப்பொழுது ஹிட்லர் பயப்படலானார். தாம் மேற்கே பிரிட்டிஷ் பிரெஞ்சு நேசதேசங்களுடன் போர்புரிந்து கொண்டிருக்கையில், ஸ்டாலின் பின்புறமாக வந்து தம்மைத் தாக்கக்கூடுமென்று எதிர்பார்த்து, ஸ்டாலினுடன் 'அனுக்கிரமிப்பு ஒப்பந்தம்' செய்துகொள்ள முன்வந்தார். ஸ்டாலினும் மதியில்லாமல், ஆதிமுதல் போல்ஷிவிஸத்தை எதிர்த்து, அதைக் கண்டதுண்டமாக்க வேண்டுமென்று கர்ஜித்து வந்த, பரம விரோதியான ஹிட்லருடன் ஒப்பந்தம் செய்துகொள்ள முனைந்தார். ஒப்பந்தம் செய்துகொண்டதோடன்றி, ஹிட்லருக்கு உதவியாக போலந்தின் மேற்குப் பாகங்களைத் தம் சேனைகளை யனுப்பிக் கைப்பற்றிக்கொண்டார்.

இனி ஸ்டாலினுடைய உள் நாட்டு விவகாரங்களைப் பற்றிக் கவனிப்போம். சோவியத் சர்க்கார் ஸ்தாபிக்கப்பட்டவுடன் தேசத்திலிருந்த நிலங்கள் யாவற்றையும் முதலாளிகளிடமிருந்து பிடுங்கி குடியானவர்களுக்குக் கொடுக்கப்பட்டன வென்று கூறினோமல்லவா? இதன் காரணமாக நாடெங்கும் விவசாயம் க்ஷீணித்து, வியாபார மந்தமும் ஏற்பட்டது. ஸ்டாலின் இச் சந்தர்ப்பத்தைத் தம் ஐந்து வருடத் திட்டங்களால் சமாளித்தார். விவசாயத்தில் நவீன முறைகளை அனுஷ்டிப்பதற்கும், தொழில்களை நவீன யந்திர சாதனங்களால் விருத்தி செய்வதற்கும் ஏற்பாடுகள் செய்தார். முதன் முதலாக ரஷ்யா முழுவதும் மின்சார விளக்கு

கள் போடும்படி செய்தார். 1927-ல் ஸ்டாலின் ஒரு புதிய திட்டத்தை அமுலுக்குக் கொணர்ந்தார். அதன்படி குடியானவர்கள் யாவரும் நிலங்களில் உழைத்து, மாசூலை அரசாங்கத்துக்குக் கொடுத்துவிட வேண்டும். அரசாங்கம் அவர்கள் தேவைகளைக் கவனித்துக் கொள்ளும். இத் திட்டம் குடியானவர்களுக்குச் சற்றும் பிடிக்கவில்லை. விளைச்சலை அரசாங்கத்தினிடம் கொடுக்க மறுத்தனர். மேலும் அத் திட்டப்படி, குடியானவர்கள் தமக்குச் சொந்தமாக வுள்ள உயிர் வாழ்வனவற்றையும் துரைத்தனத்திடம் ஒப்படைத்து விடவேண்டும். இதையும் தீவிரமாக எதிர்த்தனர். அரசாங்கம் பிடிவாதமாக இருக்கவே, அவரவர்களுக்குள்ள ஆடுமாடுகளை அவரவர்களே கொன்று விட்டனர். ஸ்டாலின் இன்னும் பிடிவாதம் செய்தால் நிலைமை மோசமாகி விடும் என்று எண்ணி, விவசாயிகளை நிரம்பவும் பாதித்த சில நிபந்தனைகளை மட்டும் நீக்கினர். 1932-ல் ஸ்டாலின் மறுபடியும் தம் பழைய திட்டத்தை அமுலுக்குக் கொண்டு வந்தார். இப்போது, விவசாயிகள் தமக்குத் தேவையான தானியங்களை மட்டும் பயிரிட்டு, அறுவடை செய்துகொண்டு எஞ்சியவற்றைப் பாழாய்ப் போகும்படி விட்டுவிட்டனர். ஸ்டாலின் இப்பொழுது அவர்களுக்கு நல்ல படிப்பினை ஒன்று கற்பிக்க எண்ணினர். போலீஸையும், இராணுவத்தையும் அனுப்பி, குடியானவர்கள் தமக்கென்று அறுவடை செய்திருந்த தானியங்களைக் கைப்பற்றச் செய்தார். இதன் பயனுக நாடு முழுவதும் கொடும் பஞ்சம் ஏற்பட்டது; அநேக ஆயிரம் மக்கள் பஞ்சத்திற் கிரையாயினர். ஸ்டாலின் இவ்வளவு கொடுமைக்கும் சிறிதுங் கூட அசைந்து கொடுக்கவில்லை.

ஸ்டாலின் லெனின் இறந்ததிலிருந்து பிரதமமந்திரியாயிருந்துவந்த ரிகோவ் என்பவரை நீக்கிவிட்டுத் தமது நம்பிக்கைக்குப் பாத்திரமாயுள்ள வேலையாளான மொலடோவ் என்பவரைப் பிரதம மந்திரியாக்கினர். மேலும், அரசாங்க உத்தியோகங்கள் அனைத்திலும், தம்முடைய சொந்த மாகாணமான ஜியார்ஜியாவைச் சேர்ந்தவர்களும், தம்மை முழுமனதுடன் ஆதரிப்பவர்களுமான தம் நண்பர்களையே நியமித்தார்.

ஸ்டாலின் தற்போது சோவியத் அரசாங்கத்தின் சர்வாதிகாரியாக விளங்குகிறார். அவரே பொதுவுடைமைக் கட்சியின் பொதுக் காரியதரிசியுமாவர். அவரது அந்தரங்க வேலையாட்களான மொலடோவும், காகனோவிட்சும்,மத்தியக் கமிட்டியின் அரசியல் சபைக்கும், ஆர்கானிஸேஷனல் பூரோவுக்கும் தலைவர்களாவர். அரசியல் சபை அரசாங்கத்தை நடத்தி வருகிறது. ஆர்கானிஸேஷனல் பூரோ கட்சியின் சார்பாகவும் பிரசாரம் செய்து வருகிறது. இவ்விரண்டு சபைகளின் அங்கத்தினர்களும் ஸ்டாலினால் நியமிக்கப்பட்டிருப்பவர்களாவர்.

நடுத்தர உயரம், மஞ்சட் கருநிற விழிகள், பருத்தும் வளைந்துமுள்ள நாசி, கருத்தடர்ந்த மீசை, அடர்ந்து கறுத்துள்ள தலைமயிர்—இவைகளே ஸ்டாலினின் கம்பீர தோற்றத்தைக் காட்டும் அம்சங்கள். அவர் ரஷ்யாவின் சர்வாதிகாரியாயிருந்துங்கூட, வெகு எளிய உடைகளையே அணிகிறார். காக்கி சரட்டு, நிஜார், அதன்மேல் பச்சைநிற மழைக்கோட்டு, மாலுமிகள் அணியும் தொப்பிபோன்ற ஒரு குல்லாய் இவற்றைத்தான் அவர் அணிந்து கொள்கிறார். குளிர்காலத்தில், இவற்றிற்குப் பதிலாக கம்பளிக் குல்லாயும் கோட்டும் போட்டுக் கொள்வார். அவர் இதர ஸோவியத் அதிகாரிகளுடன் கலந்து நின்றிருந்தாரானால், அவருடைய அடையாளத்தைக் கண்டுபிடிப்பது சிறிது சிரமம்தான். அவர் அதிதமான வாக்குவன்மை படைத்திராவிட்டாலும், தாம் சொல்லும் விஷயங்களைக் கேட்பவர்கள் மனதில் நன்றாகப் பதியும் வண்ணம் திரும்பத் திரும்பக் கூறுவார். அவருக்கு ஹாஸ்ய உணர்ச்சி உண்டு. பிரசங்கம் செய்யும்போது இடையிடையே ஹாஸ்ய மொழிகளைக் கூறி, பிரசங்கத்துக்கு விறுவிறுப்பு உண்டாக்குவார்.

சூதாட்டம், குடி, கூத்தி முதலியவற்றை ஸ்டாலின் அறவே வெறுக்கிறார். அவர் ரஷ்ய மக்களுக்கு ஒரு ஆதர்ச புருஷராக விளங்கவேண்டுமென்று நடந்துகொள்கிறார். கதைகள், நாடகங்கள் முதலியவைகூட நல்லொழுக்கத்தைப் போதிக்கக் கூடியனவாயிருக்க வேண்டுமென்று வற்புறுத்துகிறார்.

ஸ்டாலின் பிற நாடுகளைப் பிடித்துத் தமது அரசாங்கத்தில் சேர்த்துக்கொள்ள வேண்டுமென்ற விருப்ப மில்லாதவர் என்று அடிக்கடி அறைகூவப்படுகிறது. மண்ணாசை, பொன்னாசை, பெண்ணாசை யாவற்றையும் துறந்து விட்டதாகச் சொல்லும் இந்த ரஷ்யக் கபட சந்நியாசி லட்வியா, எஸ்டோனியா என்ற சிறு தேசங்களை தமது ஆக்ஞைப்படி நடக்க வேண்டுமென்றும், இல்லாவிட்டால் படையெடுத்து அழித்து விடுவதாகவும் பயமுறுத்தி தமக்கு வேண்டிய முக்கிய வசதிகளை அவற்றினிட மிருந்து பெற்றுக் கொண்டார். இதே மாதிரியாக பின்லந்து என்ற பிறிதொரு சிறிய தேசத்தைப் பயமுறுத்தவும், அது அவருடைய ஆக்ஞைப்படி நடக்க மறுத்தது. உடனே, இராணுவம், தளவாடங்கள் ஆகியவற்றில் மிகவும் பின்னணியிலிருந்த அச்சிறிய தேசத்தின்மீது தம் செம்படை வீரர்களை ஏவினர். பின்லந்து வீரர்கள் வீராவேசத்துடன் சுமார் ஒரு மாதம் வரை ரஷியப் பெரும் படைகளை எதிர்த்துச் சில விடங்களில் முறியடித்து, ரஷியப் படைகளின் வீரத்தை மெச்சி உலக மக்கள் கை கொட்டிச் சிரிக்குமாறு செய்தனர். என்னதா னிருந்தாலும், வெளி உதவி அதிக மில்லாத அச் சிறு தேசம் எத்தனை நாட்கள்தான் எதிர்த்துச் சமர் செய்ய முடியும்? கடைசியில், ஸ்டாலின் பின்லந்தைக் கைப்பற்றிக் கொண்டு, தமது விருப்பப்படி தேவையானவற்றைத் தமக்கு எடுத்துக் கொண்டார்.

இன்னும் எந்தெந்த தேசங்களைக் கபளீகரம் செய்ய வேண்டு மென்று ஸ்டாலின் நினைத்திருக்கிறாரோ தெரியவில்லை. 'பூனைபோ லிருந்து புலிபோல் பாயும்' அவருடைய எதிர்காலச் செய்கைகளைப் பற்றி நாம் ஒன்றும் கூறுவதற்கில்லை. ஆனால், ஒன்று மட்டும் நிச்சயமாகி விட்டது. அவர் "பொது ஜன விரோதி நெம்பர் 1," "பேர்லின் மிருகம்" என்னும் பட்டப் பெயர்களை வகிக்கும் ஹிட்லருடன் சேர்ந்து, "பொது ஜன விரோதி நெம்பர் 2" ஆகி விட்டதில் எள்ளளவுகூட சந்தேகமில்லை.

**பொங்கும் மங்களம் எங்கும் தங்குக!**

Printed at The Guardian Press, 40, Broadway, Madras.—(419410)

# ராமுலு புதிய
# ஸங்கீத பிரசுரங்கள்

இவை சென்ற நான்கு தசாப்தங்களாகப் பற்பல ஸங்கீதப் புத்தகங்களை எழுதிப் பிரசுரம் செய்து ஸங்கீத உலகத்திற்குப் பேருதவி புரிந்த ஸங்கீத ஸாகித்ய பரத சாஸ்திர வித்வான் பிரம்மஸ்ரீ கெ. வி. ஸ்ரீனிவாஸ அய்யங்கார் அவர்களால் ஸ்வர ஸாஹித்யங்களுடனும், ராக லக்ஷணங்களுடனும், குறிப்புக்களுடனும் மற்றும் அனேக சீர்திருத்தங்களுடன் பிழையின்றி புதிதாய்த் தயாரித்த அரிய பெரிய புத்தகங்கள். இவை நான்கும் துரைத்தனத்தார் அங்கீகரித்தவை.

| | | | | |
|---|---|---|---|---|
| 1. | ராமுலு ஸங்கீத சிந்தாமணி .... | 3 | 0 | 0 |
| 2. | ராமுலு திராவிட கானம் .... | 3 | 0 | 0 |
| 3. | ராமுலு ஸங்கீத சில்லரைக் கோவை.... | 3 | 0 | 0 |
| 4. | ராமுலு கீர்த்தன ரத்னங்கள் (300).... | 1 | 4 | 0 |

முக்கிய கவனிப்பு :—இப்புத்தகங்கள் ஸங்கீதாபிமானிகளுக்கும், ஸங்கீத உபாத்தியாயர்கட்கும் ஒரு பெரிய நிதியாகும் என்பதை யாம் எடுத்துக் காட்டவேண்டியதில்லை. முழு விபரமான கீர்த்தனங்களின் அட்டவணையுடன் கூடிய கேட்லாக்கு வேண்டுபவருக்கு இனமாய் அனுப்பப்படும். முன் பணமாக ரூபாய் 6—8—0 மணி ஆர்டர் செய்தால் மேற்சொன்ன நான்கு ஸங்கீத புத்தகங்களும் வேறுவிதச் செலவின்றி ரயில் பார்சல் மூலமாய் அனுப்பிவைக்கப்படும். பர்மா, சிலோன், சிங்கப்பூர், பினங்கு முதலிய தேசத்திலுள்ளவர்கள் ரூபா 7—8—0-க்கு மணி ஆர்டர் அல்லது 12. sh-க்கு British Postal Order அனுப்பவேண்டும். புத்தகங்களை வி. பி. மூலமாய் அனுப்பப்படமாட்டாது.

**எம். எஸ். ராமுலு கம்பெனி**

**286, அப்பா பில்டிங்ஸ் :: எஸ்பிளனேட், மதராஸ்**

# ராமுலு ஒப்பற்ற ஒரு அணு பிரசுரங்களான முற்கால தற்காலப் பெரியார்களது வாழ்க்கைச் சரித்திரங்கள்

உலகின் நியதியை மாற்றியமைத்து மாண்பு பெறவைத்த—ஜன சமுதாயத்தைத் திருத்தியமைத்து சிறந்து ஒளிரச் செய்த—தாங்கள் பிறந்த தேசங்களுக்கு அழியாப் புகழை யுண்டாக்கிச் செழித்தோங்கச் செய்த மனித சிரேஷ்டர்களைப் பற்றி நீங்கள் அறிந்துகொள்ள வேண்டாமா? தீர்க்கதரிசிகள், மகான்கள், தத்துவ ஞானிகள், விஞ்ஞான சாஸ்திரிகள், தேசியத் தலைவர்கள், சர்வாதிகாரிகள், மகா வீரர்கள், கவிஞர்கள் முதலிய பிரமுகர்களுடைய வாழ்க்கை வரலாறுகளை, சிறந்த எழுத்தாளரான ஆசிரியர் நாரண துரைக்கண்ணன் அவர்களைக் கொண்டு தொடர்ச்சியாக வெளியிட்டுவருகிறோம். பல வகையிலும் சிறப்புபொருந்திய இந்த 'ராமுலு ஒப்பற்ற பிரசுரங்கள்' பரம ஏழை மக்களும் வாங்கிப் படித்து பயன்பெற வேண்டி இவை ஒவ்வொன்றுக்கும் ஒரு அணு விலையே வைத்திருக்கின்றோம்.

1. மகாத்மா காந்தி
2. கோபாலகிருஷ்ண கோகேல்
3. ராஜாராம் மோகன்ராய்
4. ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸர்
5. ஸ்வாமி விவேகானந்தர்
6. ஸ்வாமி ராமதீர்த்தர்
7. பகவான் அரவிந்தர்
8. ஸ்ரீ ரமண மகரிஷி
9. ஸ்ரீ ராமலிங்க சுவாமிகள்
10. ஸ்ரீ சாரதாமணி தேவியார்
11. அன்னி பெஸண்டு அம்மையார்
12. கவி அரசி சரோஜினிதேவியார்
13. கவிஅரசர் ரவீந்திரநாத தாகூர்
14. பண்டித ஜவஹர்லால் நேரு
15. சுபாஷ் சந்திர போஸ்
16. நெப்போலியன் போனபார்ட்டி
17. வின்ஸ்டன் சர்ச்சில்
18. எமன் டிவாலரா
19. பிரான்கிலின் ரூஸ்வெல்டு
20. பெனிடோ முஸோலினி
21. அடால்ப் ஹிட்லர்
22. ஜோஸப் ஸ்டாலின்
23. முஸ்தபா கமால் பாஷா
24. ஸ்ரீமத் பகவத்கீதை வசனம்

**N. B. மேல் கண்ட தினுசுகள் ஆங்கிலத்திலும் கிடைக்கும்**

குறிப்பு: தேவையான தினுசுகளுக்கு அவற்றின் மொத்தக் கிரயமும் தபால்செலவும் (எந்த 1, 2, 3, 4, 5 புஸ்தகங்களுக்காவது தபால் செலவு முறையே 0-0-9, 0-1-3, 0-1-6, 0-1-9, 0-2-0) சேர்த்து மணி ஆர்டர் மூலம் அல்லது இந்தியா தபால் ஸ்டாம்புகளாக அனுப்பவேண்டும். எக்காரணங்கொண்டும் புத்தகங்கள் வி. பி. யில் அனுப்பப்படுவதில்லை.

**எம். எஸ். ராமுலு கம்பெனி, 286, எஸ்பிளனேட், மதராஸ்**

# RAMULU'S NEW MODEL
# SPECIALS

We have brought this **Ramulu's New Model Specials** with the help of able and experienced authors for the especial benefit of students. A set of these books in the hands of a student is sure to be of great help and an indispensable treasure chest, helping him to avoid hit and miss methods in his school works. Our single aim in bringing out these **Ramulu's New Model Specials** is to make students successfully fit for the otherwise hard task of prosecuting their studies. We have **deliberately priced** these books at ONE ANNA each so as to enable one and all to be in possession of them.

| | | |
|---|---|---|
| 1. | Ramulu's Letter-writer *(101 Letters; 64 p.)* | 0 1 0 |
| 2. | Ramulu's Select Essays *(60 Essays; 64 p.)* | 0 1 0 |
| 3. | Ramulu's English Dictionary—*64 pages*— | 0 1 0 |
| 4. | Ramulu's English—Tamil Dictionary ... | 0 1 0 |
| 5. | Ramulu's English—Telugu Dictionary ... | 0 1 0 |
| 6. | Ramulu's Tamil-Tamil-Eng.Dictionary ... | 0 1 0 |
| 7. | Ramulu's Encyclopedia for Students ... | 0 1 0 |
| 8. | Ramulu's Student's Year Book ... | 0 1 0 |
| 9. | Ramulu's Ready - Made Speeches (50) ... | 0 1 0 |
| 10. | Ramulu's Dialogues And Debates ... | 0 1 0 |
| 11. | Ramulu's How to Write Correct English ... | 0 1 0 |
| 12. | Ramulu's 2001 Idioms And Phrases ... | 0 1 0 |
| 13. | Ramulu's 2001 English - Tamil Phrases ... | 0 1 0 |
| 14. | Ramulu's 1001 Select English Proverbs ... | 0 1 0 |
| 15. | Ramulu's 1001 Select Telugu Proverbs ... | 0 1 0 |
| 16. | Ramulu's 1001 Select Tamil Proverbs ... | 0 1 0 |
| 17. | Ramulu's 501 Parallel Tamil-Eng. Proverbs | 0 1 0 |
| 18. | Ramulu's 501 Parallel Telugu-Eng.Proverbs | 0 1 0 |
| 19. | Ramulu's 501 Golden Sayings of Great Men | 0 1 0 |
| 20. | Ramulu's 501 Riddles And Puzzles ... | 0 1 0 |
| 21. | Ramulu's 501 New Laughing-Gas Tit-Bits. | 0 1 0 |
| 22. | Ramulu's 501 Dreams And Their Effects... | 0 1 0 |

Postage: 0-0-9, 0-1-3, 0-1-6, 0-1-9, 0-2-0 for any 1,2,3,4,5 Copies respectively. Send Indian Postage stamps or M. O. No, V. P. P.

**M. S. RAMULU & CO., ESPLANADE, MADRAS**

***Copies Also At:*** **P. T. BELL & CO., G. T., MADRAS**